# அரங்கம் செய்திகள்

தமிழ் மக்களுக்கான ஒரு தொடர்பூடகம்


வார இதழ் – இலவசம்

வெள்ளி, ஜூன் 28 2019. இதழ் - 68









போதைப் பொருளும் மரண தண்டனையும்...

பக்கம் - 03



சொல்லத் துணிந்தேன்!

கல்முனை வடக்கு (தமிழ்) உபபிரதேச ...

பக்கம் - 04



இஸ்லாமிய மாணவர்கள் வேடமிட்டு மேடையேறி நடித்த நடித்த நாடகங்கள்

பக்கம் -04



யார் இந்த "அப்புஹாமி"

பக்கம் - 12



## 'கல்முனை வடக்கு விவகாரத்திற்கு ஒருமாதகால அவகாசம்!'

### --- காரைதீவில அமைச்சர் மனோகணேசன்

(காரைதீவு நிருபர் சகா)

'கல்முனை வடக்கு உப பிரதேச செயலக தரமுயர்த்தல் விவகாரம் தொடர்பாக அரசாங்கம் ஒருமாதகால அவகாசம் வழங்கியுள்ளது. அதற்குள் நிச்சயம் தீர்வு வரும் என நம்புகிறேன்.' என்று காரைதீவில் வைத்து தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள் சமுகமேம்பாடு, இந்துகலாசார அலுவல்கள் அமைச்சர் மனோகணேசன் தெரிவித்தார்.

காரைதீவில் நேற்று விபுலாநந்த மணிமண்டபத்தை திறந்துவைக்க வந்த அமைச்சரிடம் எமது ஊடகவியலாளர் வடக்கு பிரதேச செயலக விவகாரம் தொடர்பாகக் கேட்டபோது அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார். அவர் மேலும் கூறுகையில்:

'கல்முனைத் தமிழ்மக்களின் உண்ணாவிரதம் தொடர்பில் நானறிவேன். அவர்களது நியாயமான கோரிக்கை பற்றியும் அறிவேன். அவர்களது அக்கோரிக்கைக்கு நிச்சயம் நல்லபலன் கிடைக்கும்.

அது பற்றி நான் அமைச்சரவையிலும் எடுத்துரைத்தேன். அங்கு பிரதமர் தலைமையில் குழுவொன்று ஒருவாரகாலத்துள் அமைத்து ஒருமாத காலத்துள் பிரச்சினையை தீர்த்துவைப்பதாக கூறப்பட்டது.

ஓரினத்தின் உரிமை தொடர்பான பிரச்சினை எழும்போது மற்ற இனமும் விட்டுக்கொடுத்து பரஸ்பரம் நல்ல தீர்வைக்காண உதவவேண்டும். நாம் மட்டும் விடாப்பிடியாக நின்றுகொண்டு மற்றவர்கள் மட்டும் சகலவிடயங்களிலும் விட்டுத்தரவேண்டும் என்று எதிர்பார்க்கக்கூடாது.

தமிழர்கள் இந்துக்கள் பலமானவர்கள். ஆனால் பரந்த மனப்பான்மை உடையவர்கள். அதற்காக அதனைப்பலவீனம் என்று ஏனையவர்கள் நினைத்துவிடக்கூடாது. ' என்று தெரிவித்தார்.

## மைத்திரியே ஜனாதிபதி வேட்பாளர் என சுதந்திரக் கட்சி முடிவு! மகிந்த தரப்பு பதிலில்லை

(அமிர்தஸன்)



மகிந்த ராஜபக்சவை மையப்படுத்திய ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் பேச்சு நடத்தி வரும் ஸ்ரீலங்கா சுதந்தரக் கட்சி, நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதி வேட்பாளராக அறிக்க வேண்டுமென வலியுறுத்தி வருகின்றது.

இது தொடர்பாக ஆறு சுற்றுப் பேச்சுக்கள் நடத்தப்பட்டுள்ள நிலையில் நேற்று புதன்கிழமை இரவு இடம்பெற்ற ஸ்ரீலங்கா சுதந்தரக் கட்சியின் மத்திய குழு, ஜனாதிபதி வேட்பாளாராக மைத்திரிபால சிறிசேனவை களமிறக்குவதென தன்னிச்சையாக முடிவு செய்துள்ளது.

இதனை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன எற்றுக்கொள்ளுமென ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நம்பிக்கை வெளியிட்டுள்ளது. ஆனால் மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதி வேட்பாளராக நியமிப்பதென தீர்மானிக்கவில்லையென்பதை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அதிகாரபூர்வமாகக் கூறவில்லை.

ஜனாதிபதி வேட்பாளரான முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கேட்டாபய ராஜபக்சவை ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்க ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சிக்குள் எதிர்ப்புகள்

தொடர்ச்சி... (பக்கம் -15)

## சிரேஷ்ட ஊடகவியலாளர் எஸ். தில்லைநாதன் காலமானார்



சிரேஷ்ட ஊடகவியலாளர் எஸ். தில்லைநாதன் புதனன்று மாலை காலமானார். இறக்கும்போது இவருக்கு 75 வயது. திடீர் சுகயீனமுற்ற இவரை மத்துகமயிலுள்ள அவரது வீட்டிலிருந்து ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லும் வழியில் உயிரிழந்ததாக உறவினர்கள் தெரிவித்தனர்.

இரண்டு பெண் பிள்ளைகளின் தந்தையான இவரின் பூதவுடல் பொரளை மலர்ச் சாலையில் வைக்கப்பட்டு இறுதிக் கிரியைகள் நடைபெறவுள்ளன. தினகரன், தினகரன் வாரமஞ்சரியின் பிரதம ஆசிரியராகப் பணியாற்றிய எஸ். தில்லைநாதன் 50

தொடர்ச்சி... (பக்கம் -15)




## மரண தண்டனையை நிறைவேற்றுவதற்கான முடிவு குறித்து பிரிட்டன் அதிருப்தி



இலங்கையில் மரண தண்டனையை அமுல்படுத்தும் நிலை வந்தால் அது பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கை உட்பட சட்டத்தை அமுல்படுத்துவதற்கான பிரிட்டனின் ஒத்துழைப்புக்கு பெரும் பாதகமாக அமையும் என்று பிரிட்டன் எச்சரித்துள்ளது.

இலங்கையில் மரண தண்டனை அமுல்படுத்தப்பட்டால், பொலிஸ், பாதுகாப்பு விடயங்களில் இலங்கைக்கு உதவுவது குறித்து பிரிட்டன் மீளாய்வு செய்யும் நிலை ஏற்படும் என்று பிரிட்டனின் வெளியுறவு அலுவலகம் ஒரு அறிக்கையில் கூறியுள்ளது.

மரண தண்டனையை நிறைவேற்றுவதில்லை என்ற நீண்டகாலமாகப் பின்பற்றப்பட்ட கொள்கையை இலங்கை கைவிடத் தீர்மானித்துள்ளதாக வந்துள்ள செய்தியையிட்டு தாம் மிகுந்த கவலை அடைந்துள்ளதாகவும் பிரிட்டன் கூறியுள்ளது. கொள்கை அடிப்படையில் மரண தண்டனையை பிரிட்டன் எதிர்ப்பதாகவும் அது கூறியுள்ளது.

ஐநாவின் பொதுச்சபையில் 6 மாதங்களுக்கு முன்னதாகத்தான் இலங்கை மரண தண்டனைக்கு எதிராக வாக்களித்திருந்தது.

## தெங்கு உற்பத்தியை அதிகரிக்க திட்டம்



தெங்கு உற்பத்தியை அதிகரித்து அதன்மூலம் வருமானத்தை ஈட்டும் வேலைத்திட்டத்தை தெங்கு அபிவிருத்தி சபை முன்னெடுத்துள்ளது. தனியார் துறையுடன் இணைந்து இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.
இதன்கீழ் 22 ஆயிரம் தெங்கு செய்கையாளர்களுக்கு உயர்தர தென்னங்கன்றுகள் வழங்கப்படுவதுடன் மானிய உதவிகளை வழங்குவது பற்றியும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்த தென்னங்கன்றுகள் ஐந்து வருட காலங்களில் அறுவடையை தரக்கூடியவை என தெங்கு அபிவிருத்தி சபை தெரிவித்துள்ளது.

## அத்தியாவசிய சேவையாக ரயில் போக்குவரத்து



இலங்கை ரயில் சேவையை அத்தியாவசிய சேவையாக பிரகடனம் செய்யும் அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கையொப்பத்துடன் குறித்த வர்த்தமானி அறிவித்தல் வந்துள்ளது.

ரயில் சேவையை அத்தியவசிய சேவையாக பிரகடனம் செய்ய உள்ளதாக பிரதியமைச்சர் அசோக அபேசிங்க முன்னதாகக் கூறியிருந்தார்.

## ரயில் ஊழியர் வேலைநிறுத்தம்



திட்டமிட்டபடி கடந்த நள்ளிரவு முதல் இரண்டு நாள் வேலை நிறுத்தம் செய்யப் போவதாக புகையிரத தொழிற்சங்கம் அறிவித்துள்ளது.

முன்னதாக சம்பள முரண்பாடு உள்ளிட்ட சில பிரச்சினைகளுக்கு அதிகாரிகள் தீர்வு வழங்காமையின் காரணமாக போராட்டத்தில் ஈடுபடுவதாக அவர்கள் கூறியுள்ளனர்.

ஒவ்வொரு வாரமும் வியாழக்கிழமை நள்ளிரவு முதல் வேலை நிறுத்தம் செய்ய கடந்த வாரம் புகையிரத தொழிற்சங்கம் தீர்மானித்தது.

எவ்வாறாயினும் ரயில் சேவையை அத்தியவசிய சேவையாக பிரகடனம் செய்த பின்னர் வேலை நிறுத்தம் செய்யும் புகையிரத ஊழியர்களுக்கு எதிராக அவசர கால சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க முடியும் என்று போக்குவரத்து பிரதியமைச்சர் அசோக அபேசிங்க கூறியுள்ளார்.

## திருக்கோவிலில் கடலரிப்பு!

திருக்கோவில் பிரதேசத்தில் மீண்டும் கடலரிப்பு தொடங்கியுள்ளது. குறிப்பாக திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுதசுவாமி ஆலய முன்னாலுள்ள தீர்த்தமாடும் கடற்பரப்பில் தற்போது தீவிரமாக கடலரிப்பு ஏற்பட்டுள்ளதைக்காணலாம்.

## மண் சரிந்து இருவர் பலி

நக்குவானை, பொத்துபிட்டி பிரதேசத்தில் மண் மேடு சரிந்து விழுந்ததில் இரண்டு பேர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் இருவர் காயமடைந்துள்ளனர்.

பொத்துபிட்டி மகா வித்தியாலயத்தில் எல்லைச் சுவர் அமைப்பதற்காக குழி தோண்டிக் கொண்டிருக்கும் போது மண்மேடு சரிந்து விழுந்துள்ளது.

காயமடைந்த இருவரும் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பணியில் ஈடுபட்டிருந்த ஊழியர்கள் இருவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## சஹ்ரானின் உரைகளுடன் தொடர்புப்பட்ட 51 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்

சஹ்ரான் ஹாசிமின் உரைகள் தொடர்பில் 51 பேர் பாதுகாப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். பாராளுமன்றத்தில் பிரதி அமைச்சர் நளின் பண்டார இதனைத் தெரிவித்தார்.

அவசரகால சட்டத்தை ஒரு மாத காலத்துக்கு நீடிப்பது தொடர்பான பிரேரனை மீதான விவாதத்தை ஆரம்பித்து வைத்து பிரதி அமைச்சர் உரையாற்றினார்.

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற தாக்குதல்களுடன் தொடர்புப்பட்ட பிரதான சந்தேகநபர்கள் உட்பட இரண்டாயிரத்து 389 பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

236 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். 186 பேர் தடுத்து வைக்கும் உத்தரவின் கீழ் விசாரிக்கப்பட்டு வருகின்றனர். இவர்களுள் மூவர் அவசரகால சட்டத்தின் கீழும் 186பேர் பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழும் கைது செய்யப்பட்டுள்ளனர். 425 பேரின் 263 பேருக்கு வழக்கு பதிவு செய்யக்கூடியநிலை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பான ஆலோசனைக்கு சட்டமா அதிபருக்கு விடயங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. மேலும் 42 பேர் தொடர்பிலும் சட்டமா அதிபரின் ஆலோசனை பெறப்படவுள்ளது. 7 பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர். குற்றப்புலனாய்வு பிரிவில் 79 பேர் இருக்கின்றனர். இவர்கள் முக்கிய தவறு இழைத்தவர்கள் ஆவர். டிஐஜ பிரிவில் 29 பேர் இருக்கின்றனர். சிஜடீ அதாவது கொழும்பு குற்றபுலனாய்வு பிரிவில் 29பேர் இருக்கின்றனர்.

முக்கிய சந்தேக நபர்கள் தகவல்களுக்கு அமைவாக கைதுசெய்யப்பட்டுள்ளனர். இதேபோன்று சஹிரானின் விரிவுகளை தொடர்புப்பட்ட 59 பேர் இருக்கின்றனர். இந்த விடயங்களில் அரசியல் நடவடிக்கைகளை பயன்படுத்துபவர்களும் சிலர் இருக்கின்றனர். இவர்கள் நாட்டின் இஸ்திர தன்மையை சீர்குலைக்க முயற்சிக்கின்றனர். என்றும் பிரதி அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கொழும்பு துறைமுகத்தில் போதைப்பொருள் மீட்பு


கடதாசிக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த கணிசமான அளவு ஐஸ் ரக போதைப்பொருள் கொழும்பு துறைமுகத்தில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

மலேசியவில் இருந்து இவை நாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாக பதில் சுங்க ஊடகப் பேச்சாளர் லால் வீரக்கோன் கூறியுள்ளார்.

சம்பவம் தொடர்பில் 37 வயதான மலேசிய பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சுங்கப் பிரிவின் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவலையடுத்து இவை கண்டெடுக்கப்பட்டதாக லால் வீரக்கோன் கூறியுள்ளார்.

## போதை ஒழிப்புவாரத்தில் கல்முனை மதுவரி நிலையத்தினர் திடீர் பாய்ச்சல்!



காரைதீவு நிருபர் சகா

போதை ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு கல்முனை மதுவரி நிலையத்தினர் திடீர்ப்பாய்ச்சலை நடாத்திவருகின்றனர்.

எதிர்வரும் முதலாம் திகதிவரை வரை போதை ஒழிப்பு வாரம் நடைமுறைப்படுத்த மதுவரி திணைக்களம் தீர்மானித்துள்ளது . எனவே குற்றச்செயல்களின் கண்டு பிடிப்பு தொடரும் என கல்முனை மதுவரி நிலையபொறுப்பதிகாரி பிரதான பரிசோதகர் சதங்கராஜா தெரிவித்தார்.

போதை ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு கல்முனை மதுவரி நிலையத்தினர் மேற்கொண்ட சுற்றி வளைப்பில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அக்கரைப்பற்று பிரதேசத்தில் சட்டவிரோதமாக கேரளா கஞ்சா வைத்திருந்த குற்றத்திற்காக இருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் உள்ளனர்.

கடந்த 25ஆம் திகதி நிந்தவூர் பகுதியில் கஞ்சா வைத்திருந்த குற்றத்திற்காக நால்வர் கைது செய்யப்பட்டு சம்மாந்துறை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தி 2ஆம் திகதிவரை வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது.

# போதைப் பொருளும் மரண தண்டனையும்...

கல்முனை விவகாரம், உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலில் தொடர்ச்சிகள் ஆகியவற்றை தவிர்த்துவிட்டுப் பார்த்தால் கடந்த சில காலமாகவே இலங்கையில் பொதுவாக பேசுபொருளாக இருக்கும் விடயங்களில் போதைப் பொருள் தாக்கங்கள் மற்றும் மரண தண்டனையை அமுல்படுத்தல் ஆகிய விடயங்கள் முக்கியம் பெறுகின்றன.

அதேவேளை, இந்த இரண்டு விடயமும் ஒன்றோடு ஒன்று தொடர்புள்ளவையாகவும் இருக்கின்றன.

உண்மையில் கடந்த பல வருடங்களாகவே உலக போதைப் பொருள் கடத்தல் கும்பல்களின் இடைத்தரிப்பு நாடாக இலங்கை விளங்கி வருகின்றது. தென்கிழக்காசிய நாடுகளில் இருந்து போதைப்பொருட்களை மேற்குலகுக்கு கடத்தும் வழித்தடத்தில் இலங்கை ஒரு ஒரு இடைத்தரிப்பு நாடு. இன்று இந்த நிலை மிகவும் மோசமடைந்துள்ளது. இவற்றின் மிகவும் எளிய வடிவமாக உள்ளூரில் அதிகம் பேசப்படும் கேரள கஞ்சாவைக்கூடக் கூறலாம். ஆனால், அதனைவிட மிகவும் திறன் உள்ள போதைப்பொருட்கள் பெருமளவில் இலங்கையின் ஊடாகக் கடத்தப்படுவதாக குற்றச்சாட்டுக்கள் உண்டு.

என்னதான் அவற்றை போதைப்பொருள் கடத்தல் கும்பல்கள் கடத்துவதாகக் கூறினாலும் இலங்கை அரசாங்க பணியாளர் மட்ட ஆதரவு இல்லாமல் அவற்றை இலங்கையின் ஊடாகக் கடத்துவது என்பது கடினம். இந்தப் போதைப்பொருள் கடத்தல் அதிகரிப்பு காரணமாக இலங்கையில் போதைப் பொருள் பாவனையால் பாதிக்கப்பட்ட ஆட்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது. போதை மருந்துப் பழக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களின் நிலைமை குறித்து இலங்கை மக்களுக்கு விளங்கப்படுத்த வேண்டிய அவசியம் கிடையாது. இங்கு, அங்கு என்று சொல்ல முடியாதபடி நாட்டில் எல்லாப் பகுதிகளும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளன. மக்களும் இதனை நன்கு அறிவர். இவற்றை தவிர்ப்பதற்கான பல திட்டங்களை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது. ஆனால், போதிய பலன் கிடைத்ததாகத் தெரியவில்லை. இந்த நிலைமை இங்கு மாத்திரமல்ல, மிகவும் வளர்ந்த மேற்கு நாடுகள் மற்றும் செல்வந்த மத்திய கிழக்கு நாடுகளிலும் இதே நிலைமைதான்.

இவை இரும்புக்கரம் கொண்டு அடக்கப்பட வேண்டும் என்பதில் எந்தவிதமான மாற்றுக் கருத்துக்கும் இடம் கிடையாது. அந்த விடயத்தில் இலங்கை ஜனாதிபதி அதிக ஈடுபாடும் காண்பிக்கிறார்.

அண்மையில் பிலிப்பைன்ஸ்ஸுக்கு விஜயம் மேற்கொண்ட அவர், அந்த நாடு போதைப்பொருள் கடத்தல்காரர்களை ஈவு இரக்கமின்றி கொல்லும் திட்டம் குறித்து கவரப்பட்டு கருத்து வெளியிட்டிருந்தார். ஆனால், பிலிப்பைன்ஸ் நாட்டின் மனித உரிமை நிலவரம் குறித்த விமர்சனங்களை அடுத்து அவர் தனது கருத்தை பின்னர் வலியுறுத்தவில்லை.

ஆனால், ஒரு விடயத்தில் அவர் மிகவும் பிடிவாதமாக இருக்கிறார். அதாவது, போதை மருந்துக் கடத்தல்காரர்களுக்கு மரண தண்டனை வழங்குவது என்றும் அதற்காக 40 வருடங்களுக்கு அதிகமான காலமாக இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படாமல் இருந்த மரண தண்டனை நிறைவேற்றத்தை மீள அமுல்படுத்துவது என்பதிலும் அவர் தீவிரமாக இருக்கிறார்.

அதன் அடுத்த கட்டமாக 4 பேருக்கு மரண தண்டனையை விதிப்பதற்கான அனுமதியையும் அவர் வழங்கியுள்ளதாகக் கூறப்படுகின்றது. இங்குதான் பிரச்சினை ஆரம்பமாகின்றது.

எந்தக் குற்றத்துக்கும் மரண தண்டனை வழங்குவது சரியா, இல்லையா என்பது இன்றைய நிலையில் உலக மட்டத்தில் எங்கும் நடக்கும் ஒரு விவாதம். ஒரு குற்றத்துக்கான தண்டனை என்பது மரணமாக இருக்க முடியாது என்பதும் அதற்கு மாறாக மிகவும் கொடிய குற்றங்களைச் செய்தவர்களுக்கு மரணமே தண்டனை என்றும் வாதிடும் இரு தரப்பு இருக்கத்தான் செய்கின்றன.

பாலியல் துஸ்பிரயோகம், கொலை, போதை மருந்துக் கடத்தல் மற்றும் பயங்கரவாதம் ஆகிய குற்றங்களுக்கு மரண தண்டனையே தீர்வு என்ற வாதம் ஒரு

**சீவகன் பூபாலரட்ணம்**

புறம் இருக்கிறது. பல முஸ்லிம் நாடுகளில் இது அமுல்படுத்தப்படுகின்றது.

ஆனால், பல மேற்கத்தைய நாடுகள் “குற்றங்களுக்கான தண்டனை குற்றவாளி திருந்துவதற்கு ஊக்குவிக்கும் ஒன்றாக இருக்க வேண்டுமேயொழிய அவரது உயிரை பறிப்பதாக இருக்கக்கூடாது” என்று வாதிடுகின்றன. கைதிக்கு கொடுக்கப்படும் மரண தண்டனை, அவர் குற்றமற்றவர் என்று எந்தத்தருணத்திலாவது பின்னர் நிரூபணமானால், திருத்த முடியாத தண்டனையாகிவிடும், போன உயிர் திரும்ப வராது என்ற வாதமும் இங்கு பொருந்துகிறது.

இலங்கையும் அண்மைக்காலம் வரை வழங்கப்பட்ட மரண தண்டனைகளைக் கூட நிறைவேற்றாத ஒரு நாடாகவே இருந்துவந்தது. நாற்பது வருடங்களுக்கும் அதிகமாக இந்த நடைமுறையை இலங்கை பின்பற்றி வந்தது.
ஆனால், அதில் இருந்து மாறுவது என்று ஜனாதிபதி இப்போது முடிவெடுத்துள்ளார். பல சர்வதேச மனித உரிமை அமைப்புக்களும் நாடுகளும் பிரபலங்களும் கூட இந்த விடயத்தில் இலங்கையை விமர்சித்துள்ளனர். இந்த முடிவு மிகவும் பாதகமான விளைவுகளை ஏற்படுத்திவிடும் என்று அவர்கள் வலியுறுத்துகின்றனர். ஐநாவிந் பொதுச்சபையில்கூட 6 மாதங்களுக்கு முன்னதாக மரண தண்டனை நிறைவேற்றத்துக்கு எதிராகவே இலங்கை வாக்களித்திருந்தது. குறுகிய காலத்தில் ஏற்பட்ட இந்த மாற்றம் மேற்கத்தை நாடுகளை கவலைகொள்ளச் செய்துள்ளன.

எம்மைப் பொறுத்தவரை எமக்கு கிடைத்த ஒரு வாழ்வு முழுமையாக வாழப்பட வேண்டியது. தண்டனைகள் குற்றவாளியை திருத்தவே, ஒரு உயிரைப் பறிக்க எவருக்கும் உரிமை கிடையாது என்பதுடன் உடன்படுகிறோம். உயிர் வாழ்வது என்பது ஒரு மனிதனின் அடிப்படை உரிமை. மற்றவரின் உயிரைப் பறித்த ஒருவருக்கும் அந்த உரிமை உள்ளது. போதை மருந்து கடத்தல், பயன்படுத்தல் ஆகியவற்றை தடுக்க வேறு செயற்திறன் மிக்க வழிகளைக் காண்போம். திருத்த முடியாத விளைவுகளைத் தரும் மரண தண்டனையை எதிர்ப்போம்.

---

# இஸ்லாமிய மாணவர்கள் வேடமிட்டு மேடையேறி நடித்த நடித்த நாடகங்கள்

## அருச்சுனாக வந்த அமீர் அலி

1950 களின் நடுப்பகுதிஎன நினைக்கிறேன்அப்போது எமதுவிடுதியில் எம்மோடு இருந்த பலஇஸ்லாமிய மாண்வர்களுள் மூவர்ஆழமாக மனதில்பதிந்து போயுள்ளனர்.

ஒருவர் அவுஸ்திரேலியாவில் மோனாச்பல்கலைக் கழகத்தில் பேராசிரியராயிருந்த அமீஅலி அவர்கள். இன்னொருவர் முன்னாள்அமைச்சரும் முஸ்லிம்காங்கிரஸ் ஸ்தாபகர்களில்ஒருவருமான சேகுஇஸ்ஸதீன். இன்னொருவர் தப்லீக்இயக்கத்தின் தீவிர செயற்பாட்டாளனானஹாயாத்து மூமீன்.

அமீர் அலிஎனக்கு இரு வயதுமூத்தவர். எனினும்நாம் அவரைஅண்ணா எனஅழைப்பதைவிடுத்து அமீர்அலி என்றே அழைத்தோம். அவர் காத்தான்குடியைச்சேர்ந்தவர் கவிஞர்அப்துல் காதர்லெப்பையின் புதல்வர்.

அப்போது எமக்கு சங்கீதஆசிரியராக இருந்தவர் யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த அல்வின்தேவசகாயம். நாடகம்இசை என்பவற்றிற்குப் பொறுப்பானஆசிரியர் அவர்.

அவர் "நச்சுப்பொய்கை” என்றவோர்நாடகம் தயாரித்தார், மஹாபாரத்தில்



வனவாசத்தின்போது ஒருவனத்தில் பாண்டவர் அனுபவித்த மோசமானஅனுபவத்தைக் கூறும்நாடகம் அது.

வனத்தில் திரிந்த பாண்டவர்களுக்குத்தாகம் எடுக்கிறது. தண்ணீர்தேடிவர தருமர்முதலில் சகாதேவனைஅனுப்புகிறார், அவன்அலைந்து திரிந்துஒரு தண்ணீர்குளத்தைக் காண்கிறான். தாகத்துடன்அத்தண்ணீரை அருந்தச்செல்லுகையில் ஓர்அசரீரி கேட்கிறது.

நான் கூறும்வினாக்களுக்குப் பதில்உரைத்துவிட்டு தண்ணீர் அருந்தலாம்என அசரீரிகூறுகிறது. தண்ணீர்த்தாகம் தாங்கமுடியாமல் அக்குரலைஅசட்டை செய்து தண்ணீரைஅருந்துகிறான் சகாதேவன். அதன் நச்சுத்தனமையினால் மரணம்அடைகிறான்.

சென்ற சகாதேவனைக் காணத்தருமர், நகுலனை, சகாதேவனைத் தேடிக்கொணருமாறு பணிக்கிறான். அவனும் அங்குசென்று அசரீரிவாக்கைக் கேட்காமல்தண்ணீர் அருந்திஉயிர்விடுகிறான்.

தொடர்ந்து தருமர் அருச்சுனனைஅனுப்புகிறார், அவனும் அவ்வண்ணமே உயிர்விடுகின்றான்.

வீமனும் அவ்வாறேசென்று நச்சுத்தண்ணீர் அருந்தி உயிர்விடுகிறான்.

தருமன் இறுதியாகச்சென்று அசரீரிகேட்கும் கேள்விகளுக்குப்பதிலுரைத்து அனைவரையும்உயிர்ப்பிக்கிறான்.

இந்நாடகத்தில் அல்வின்தேவசகாயம் ஆசிரியர் அமீர்அலியை அருச்சுனுக்குக்குத்தெரிவு செய்திருந்தார்.

அமீரலில் வெள்ளை வெளேரென்றுஇருப்பார், அழகானசிரிப்பு. கவர்சிகரமான சிறுவன்.

அருச்சுனுக்கான பயிற்சிகள் அமீர்அலிக்குக் கொடுபட்டன.

நாடக மேடையேற்றம்அன்று அமீர்அலிக்கு அருச்சுனன்வேசம் கட்டப்பட்டது,, தர்பாய்ச்சிக்கட்டிய வேட்டி, நெற்றியில்நாமம் பூண்டுஅமீர் அலி அருச்சுனாகமேடையில் தோன்றினார்.

முதல் காட்சிதருமர் வனத்தில்பாடியபடி மேடையில்தம்பிமாருடன் தோன்றுகிறார். வடிவான அருச்சுனன் அமீர்அலி, நாடகத்தால்மாணவர் மனதிலும்ஆசிரியர் மனதிலும்பதிந்து விட்டார்.




1961 இல்பேராதனையில் படித்துக்கொண்டிருந்தபோதுபேராசிரியர் வித்தியானந்தன்கர்ணன் போர்வடமோடிக் கூத்துநாடகம் தயாரித்தார். அமீர் அலி அங்குபடித்துக்கொண்டிருந்தார். வித்தியானதனின் அபிமானமாணவன் அமீர்அலி.

பேரா. வித்தியானந்தனின் அழைப்பைஏற்று நாடகஒத்திகைக்கு வந்திருந்தார் அமீர்அலி. கர்ணன்போரில் நாயகன் கர்ணன் அவனுக்குஎதிரான அருச்சுன்னும் முக்கிய பாத்திரம். அருச்சுன் வேடத்தை அமீர் அலிக்குஅளிக்க வித்தியானந்தன் விரும்பினார்.

என்ன செய்யபயிற்சியில் அவருக்கு ஆட்டம்வரவில்லை அதனால்அவர் கர்ணன்போர் நாடகத்தில் மேடைநிர்வாகியானார்.

அமீர் அலிமாத்திரமல்ல மஹாபாரத பாத்திரங்களாகநடித்த பலபிரப்ல்யங்களுமுண்டு

தொடர்ச்சி... (பக்கம் -13)

# சொல்லத் துணிந்தேன்! 12

கல்முனை வடக்கு (தமிழ்) உபபிரதேச செயலகத்தைத் தரமுயர்த்துமாறு கோரி 17.06.2019 அன்று ஆரம்பிக்கப்பட்ட சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டம் கடந்த சனிக்கிழமை (22.06.2019) கல்முனைக்கு விஜயம் செய்த பொதுபலசேனாவின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசேரர் வழங்கிய ஒருமாத காலத்திற்குள் தீர்வினைப் பெற்றுத்தருவேன் எனும் உறுதிமொழியையடுத்து மறுநாள் ஞாயிற்றுக்கிழமை முடிவுக்கு வந்துள்ளது.

உண்ணாவிரதிகளான கல்முனை சுபத்ரா ராமய விகாராதிபதி ரன்முத்துகல சங்கரத்ன தேரர், கிழக்கிலங்கை இந்துக்குருமார் ஒன்றியத் தலைவரும் கல்முனை முருகன் ஆலயப் பிரதம குருவுமான சிவஸ்ரீ க.கு. சச்சிதானந்தசிவம் குருக்கள், கல்முனை மாநகரசபை உறுப்பினர்களான அழகக்கோன் விஜயரட்ணம், சந்திரசேகரம் ராஜன் மற்றும் பாண்டிருப்பு அனைத்து இந்து ஆலயங்களின் ஒன்றியத் தலைவரும் கல்முனை வர்த்தக சங்கத் தலைவருமான கிருஸ்ணபிள்ளை லிங்கேஸ்வரன் ஆகியோருக்குச் சிரம் தாழ்த்துகிறேன்.

மேலும் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்ற வேளை போராட்டக் களத்திற்கு வருகை தந்த தமிழ் அரசியல் பிரமுகர்கள் சிலர் உண்ணாவிரதிகளுடன் உரையாடி விட்டு அல்லது தங்கள் ஆதரவைத் தெரிவித்துவிட்டு மட்டும் சென்றிருந்தால் மிக நன்றாக இருந்திருக்கும். ஆனால் தங்களுக்கான அல்லது தான் சார்ந்த கட்சிக்களுக்கான அரசியலைப் பேசிப் போராட்டக் களத்தை ஓர் அரசியல் மேடையாக்கியது தர்மம் ஆகாது. எந்தப் பிரச்சினையை முன்வைத்து அதற்காகத் தங்கள் உயிரைப் பணயம் வைத்துச் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டதோ அந்தப் பிரச்சினைக்கான தீர்வைத் தேடி உண்ணாவிரதிகளின் உயிரைக் காப்பாற்றும் செயற்பாடுகளில் ஈடுபடாமல் சிலர் தங்கள் சொந்த அரசியல் நிகழ்ச்சி நிரலைப் புகுத்தியமை அரசியல் அறம் ஆகாது என்பதையும் இங்கு பதிவு செய்ய விரும்புகின்றேன். இப்படிப்பட்ட அரசியல் பிரமுகர்களிடம் ஒலிவாங்கியைக் கொடுத்தது ஏற்பாட்டாளர்களின் தவறாகும். தனிநபர் மற்றும் குறுகிய கட்சி அரசியல் மனோபாவத்திலிருந்து விடுபட்டு முழுக்க முழுக்க மக்கள் நலன் சார்ந்த புதிய அரசியல் கலாசாரம் ஒன்றினை தமிழ்ச் சூழலில் வளர்த்தெடுக்க வேண்டிய தேவையையும் இவ் உண்ணாவிரதப் போராட்டம் எமக்குச் சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும், இந்த அரைவேக்காட்டு அரசியல் பிரமுகர்கள் உத்தேச கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகம் உருவாக்கம் குறித்து முழுமையான அறிவு இல்லாமல் அதன் வரலாற்றுப் பின்னணி தெரியாமல் கேள்வி ஞானத்தை மட்டும் வைத்துக்கொண்டு யானை பார்த்த குருடர்கள் மாதிரி ஊடகங்களுக்கு அறிக்கையிட்டதும் போராட்டக்களத்திற்கு விஜயம் செய்தபோது ஒலி வாங்கியில் உரையாற்றிய விடயங்களும் புத்திசாலித்தனமற்றவை. மற்றவர்களுக்குப் பொருள் மயக்கத்தை ஏற்படுத்தக் கூடியவை.

அதே போன்று கல்முனை வடக்குத் (தமிழ்) உபபிரதேச செயலகத்தைத் தரமுயர்த்துவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்ற முஸ்லிம் தரப்பினர் தங்களுக்குச் சாதகமாக நிலத்தொடர்பின்மை, இனத்துவம் என்ற காரணிகளை முன்வைக்கின்றனர். உண்மையில் இக்காரணிகள் தவறானவை, பொய்யானவை.

கல்முனை வடக்கு (தமிழ்) பிரதேச செயலக உருவாக்க விவகாரத்தில் அம்பாறை மாவட்டத் தமிழர் மகா சங்கத்தின் சார்பில் கடந்த முப்பது வருடங்களாக அர்ப்பணிப்புடன் ஈடுபட்டவன் என்ற அனுபவத்தின் அடிப்படையில் பின்வரும் நடைமுறைச் சாத்தியமான தீர்வு யோசனையை முன்வைக்கின்றேன்.

உத்தேச கல்முனை வடக்குப் பிரதேச செயலக உருவாக்கம்
நடைமுறைச் சாத்தியமான தீர்வு யோசனை

பழைய நிருவாக அலகான இறைவரி உத்தியோகத்தர் பிரிவு அல்லது பிரிவுக் காரியாதிகாரி பிரிவு – D.R.O Division (Divisional Revenue Officer) முறை நீக்கப்பட்டுப் பதிலாக உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் (Assistant Government Agent's Division – A.G.A'S Division) ஏற்படுத்தப்பட்டபோது முழுக் கல்முனைத் தேர்தல் தொகுதியும் ஒரு தனியான ஒற்றை உதவி அரசாங்க அதிபர் பிரிவான கரவாகுப்பற்று (கல்முனை) உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கீழ் கொண்டுவரப்பட்டது. இது சாய்ந்தமருது, கல்முனைக்குடி, கல்முனை, நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு, மருதமுனை மற்றும் பெரியநீலாவணை ஆகிய தமிழ் - முஸ்லிம் கிராமங்களை உள்ளடக்கியிருந்தது.

இப்பிரிவு உருவான ஆரம்பகாலத்திலிருந்தே அதாவது 1980களிலிருந்தே கல்முனைத் தமிழர்களின் கோரிக்கை என்னவாக இருந்தது என்றால் இத் தனியான ஒற்றை உதவி அரசாங்க அதிபர் பிரிவைக் கல்முனைத் தரவைப்பிள்ளையார் கோயில் வீதியைப் பிரிக்கும் எல்லையாகக் கொண்டு இரு தனித்தனி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளாக அதாவது சாய்ந்தமருது மற்றும் கல்முனைக்குடிக் கிராமங்களை உள்ளடக்கிய தென்பகுதியை நூறுவீதம் முஸ்லிம் பெரும்பான்மை உதவி அரசாங்க அதிபர் பிரிவு ஆகவும், கல்முனை, நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு, மருதமுனை மற்றும் பெரியநீலாவணைக் கிராமங்களை உள்ளடக்கிய வடபகுதியைத் தமிழர்கள், முஸ்லிம்கள், சிங்களவர்கள் வாழும் தமிழ்ப் பெரும்பான்மை உதவி அரசாங்க அதிபர் பிரிவாகவும் ஆக்கித்தரும்படியே.

இக்கோரிக்கையை அடுத்தே 12.04.1989 அன்று ஒரு தற்காலிக ஏற்பாடாகத்தான் கல்முனை வடக்குக்கென்று உப செயலகம் ஒன்று திறக்கப்பெற்று அதற்குப் பொறுப்பாகத் தமிழ் உதவி அரசாங்க அதிபர் ஒருவரும் நியமிக்கப்பெற்றார். இவர் முழுமையான அதிகாரம் கொண்ட அலுவலர் அல்ல. மேலே குறிப்பிட்ட வடபகுதியில் அமைந்த கிராம சேவகர்களில் தமிழ்ப் பெரும்பான்மைக் கிராம சேவகர் பிரிவுகளுக்குப் பொறுப்பாகக் கடமையாற்றிய கிராம சேவகர்கள் கல்முனை வடக்கு உப செயலகத்திற்குப் பொறுப்பான உதவி அரசாங்க அதிபரின் கீழும் முஸ்லிம் பெரும்பான்மைக் கிராமசேவகர் பிரிவுகளுக்குப் பொறுப்பாகக் கடமையாற்றிய கிராம சேவகர்கள் பிரதான அலுவலகத்திற்குப் பொறுப்பான அதாவது முழுக் கரவாகுப்பற்று (கல்முனை) உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குப் பொறுப்பான அதிகாரம் படைத்த உதவி அரசாங்க அதிபரின் கீழும் கடமையாற்றப் பணிக்கப்பட்டனர். இந்த ஏற்பாடு அன்றிருந்த களநிலையில் ஒரு தற்காலிக ஏற்பாடே தவிர இது வழமையான அல்லது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நிருவாக ரீதியான நடைமுறை அல்ல.

இவ்வாறு 12.04.1989 இல் ஏற்படுத்தப்பெற்ற கல்முனை வடக்கு உப பிரதேச செயலகம் தான் இன்றுவரை கடந்த முப்பது வருடகாலமாகப் பெயரளவில் இயங்கிக் கொண்டிருக்கிறது.



பின்னாளில் கிராமசேவகர் பிரிவுகளில் ஏற்பட்ட எல்லைகள் மீள்நிர்ணயத்தின் விளைவாகத் தற்போது இவ் உப-பிரதேச செயலகத்திற்குப் பொறுப்பான பிரதேச செயலாளரின் கீழ் (உதவி அரசாங்க அதிபர் பிரிவு பின்பு பிரதேச செயலகப் பிரிவு என்றும் உதவி அரசாங்க அதிபர் பிரதேச செயலாளர் என்றும் பெயர் மாற்றம் அடைந்தது) 29 தமிழ்ப் பெரும்பான்மைக் கிராம சேவகர் பிரிவுகளுக்குப் பொறுப்பான கிராமசேவகர்கள் கடமையாற்றுகின்றனர். இந்த 29 கிராம சேவகர் பிரிவுகளும் தற்போது பெரியநீலாவணை, பாண்டிருப்பு, கல்முனை, சேனைக்குடியிருப்பு மற்றும் நற்பிட்டிமுனைத் தமிழ்ப் பிரிவு ஆகியவற்றில் பூகோள ரீதியாக நிலத்தொடர்புள்ள வகையிலே அடங்கியுள்ளவை.

அதேவேளை கல்முனை வடக்கு எனக் குறிக்கப்படும் உப பிரதேச செயலகப் பிரிவு எல்லைக்குள் தற்போது 15 முஸ்லிம் பெரும்பான்மைக் கிராமசேவகர் பிரிவுகள் மேலே குறிப்பிடப்பட்ட 29 தமிழ்ப் பெரும்பான்மைக் கிராமசேவைகள் பிரிவுகளுக்கும் மேலதிகமாக உள்ளன. இவற்றிற்குப் பொறுப்பான கிராம சேவகர்கள் முஸ்லிம் பெரும்பான்மைப் பிரதான பிரதேச செயலகப் பிரிவுக்குப் (கரவாகுப்பற்றுப் பிரதேச செயலகப் பிரிவு அல்லது கல்முனைப் பிரதேச செயலகப் பிரிவு) பொறுப்பான அதிகாரம் படைத்த பிரதேச செயலாளரின் கீழ் கடமையாற்றுகின்றனர். இந்த 15 முஸ்லிம் பெரும்பான்மைச் கிராம சேகர் பிரிவுகளும் தற்போது பெரியநீலாவணை முஸ்லிம் பிரிவு, மருதமுனை, நற்பிட்டிமுனை முஸ்லிம்பிரிவு மற்றும் இஸ்லாமாபாத் ஆகியவற்றில் பூகோளரீதியாக நிலத்தொடர்பற்ற வகையிலே அடங்கியுள்ளவை.

இப்பிரதான முஸ்லிம் பெரும்பான்மைப் பிரதேச செயலகப் பிரிவின்கீழ் (கல்முனை முஸ்லிம் செயலகப் பிரிவு) மேற்கூறப்பட்ட கல்முனை வடக்குப் பிரதேசத்தில் அமைந்த ஆனால் நிலத்தொடர்பற்ற 15 முஸ்லிம் பெரும்பான்மைக் கிராம சேவகர் பிரிவுகளுடன் கல்முனைக் குடிக் கிராமத்தில் நிலத்தொடர்புள்ள வகையில் அமைந்துள்ள 14 முஸ்லிம் பெரும்பான்மைக் கிராமசேவகர் பிரிவுகளுடன் சேர்த்து அதிலும் மொத்தம் 29 கிராமசேவகர் பிரிவுகள் உள்ளன.

இப்படியிருக்கையில் கடந்த முப்பது வருட காலத்தில் இரண்டு முக்கியமான மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன.

ஒன்று : முழுக்கல்முனை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலிருந்து பிரித்தெடுக்கப்பெற்றுச் சாய்ந்தமருதுக்கெனத் தனியான உதவி அரசாங்க அதிபர் பிரிவு 2001 இல் உருவாக்கப்பட்டது. இது தற்போது முழு அதிகாரம் படைத்த பிரதேச செயலகப் பிரிவாக இயங்கிவருகிறது. இது 100மூ முஸ்லிம்களைக் கொண்டதாகும். அதன் தற்போதைய சனத்தொகை 31,055 ஆகும்.

மற்றது : மேற்குறிப்பிட்ட கல்முனை வடக்குப் பிரதேசத்தில் நிகழ்ந்த தமிழ் முஸ்லிம் மக்களின் குடிப்பரம்பல் மாற்றம். 12.04.1989 இல் நிறுவப்பெற்ற உபசெயலகப் பிரிவின் கீழ் தற்காலிக ஏற்பாடாகக் கொண்டுவரப்பட்ட மேற்குறிப்பிட்ட 29 தமிழ்ப்பெரும்பான்மைக் கிராமசேவகர் பிரிவுகளை மட்டுமே உள்ளடக்கியதான உபபிரதேச செயலகத்தையே தரமுயர்த்தித் தருமாறு எழுந்தமானமாகத் தமிழர்தரப்புக்கோருவது 'கல்முனை வடக்குப் பிரதேச செயலகப் பிரிவு' என்பதன் உண்மையான தாற்பரியத்தை உணர்த்துவதாயில்லை. அதனாலேயே இக்கட்டுரைக்கான அதாவது சில தெளிவுபடுத்தல்களையும் தீர்வு யோசனையையும் முன்வைப்பதற்கான அவசியம் இதுவிடயமாகக் கடந்த முப்பது வருடங்களாக ஈடுபாட்டுடன் உழைத்தவன் என்ற வகையில் எனக்கு ஏற்பட்டது.

மேற்படி 29 தமிழ்ப்பெரும்பான்மைக்

தம்பியப்பா கோபாலகிருஸ்ணன்

கிராமசேவகர் பிரிவுகளை மட்டுமே உள்ளடக்கியதாக உத்தேச கல்முனைவடக்குப் (தமிழ்) பிரதேச செயலகப்பிரிவு உருவானால் மேலே குறிப்பிட்ட 15 முஸ்லிம் பெரும்பான்மைக் கிராமசேவகர் பிரிவுகளும் நிலத்தொடர்பற்ற வகையிலே கல்முனை முஸ்லிம் செயலகப் பிரிவின் கீழ் தொடர்ந்திருப்பது ஒரு பிழையான முன்னுதாரணமும் நிர்வாகச் சிக்கல் நிறைந்ததுமாகும். இந்த விடயம்தான் தீர்வுக்குத் தடையாகவும் உள்ளது. எனவே நடைமுறைச் சாத்தியமான பின்வரும் தீர்வு யோசனைகளை முன்வைப்பதும் இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கல்முனை வடக்குப் பிரதேச செயலகப் பிரிவு எனும்போது பூகோள ரீதியாக அதன் வரையறுக்கப்பெற்ற எல்லைகள் வருமாறு.

வடக்கு : மட்டக்களப்பு மாவட்டத்தின் தென் எல்லை அதாவது பெரிய கல்லாறு கிராமம் (பெரியநீலாவணைக் கிராமம் வரை)
தெற்கு : கல்முனைத் தரவைப் பிள்ளையார் கோயில் வீதி (கல்முனைக்குடிக் கிராமம்)
கிழக்கு : வங்காள விரிகுடாக் கடல்
மேற்கு : கிட்டங்கி வாவி

இந்த எல்லைகளால் வரையறுக்கப்பட்ட கல்முனை வடக்குப் பிரதேச செயலகப் பிரிவு என்பது பூகோளரீதியாக நிலத்தொடர்புள்ள வகையிலே மேற்குறிப்பிடப்பட்ட 29 தமிழ்ப் பெரும்பான்மைக் கிராமசேவகர் பிரிவுகளையும் 15 முஸ்லிம் கிராமசேவகர் பிரிவுகளையும் உள்ளடக்கியதாக மொத்தம் 44 கிராமசேவகர் பிரிகளை உள்ளடக்கியதாக அமைகிறது. அதாவது இந்த 44 கிராம சேவகர் பிரிவுகளும் நிலத்தொடர்புள்ள வகையிலேயே அமைந்துள்ளன.

ஆனால் இதன் குடிப்பரம்பல் பின்வருமாறு அமைகிறது.

| | | |
|---|---|---|
| முஸ்லிம் : | | 31,338 |
| தமிழர் | : | 31,199 |
| சிங்களவர் | : | 168 |
| ஏனையோர் | : | 1,083 |
| மொத்தம்: | | 63,788 |

இது முஸ்லிம் பெரும்பான்மையாகவும் தமிழர்களும் முஸ்லிம்களும் எண்ணிக்கையில் கிட்டத்தட்டச் சமனாகவும் அமைவதால் கடந்த முப்பதுவருடகால கல்முனைத் தமிழர்களின் அரசியல் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யமாட்டாது. ஆகவே இது திருப்தியான தீர்வாகமாட்டாது. அனால் இதற்குள் பெரியநீலாவணை முஸ்லிம் பிரிவும் (KP/72 மற்றும் KP/72 A ஆகிய கிராமசேவகர் பிரிவுகள்) மருதமுனைக் கிராமமும் (KP/67, KP/67A, KP/67B, KP/67C, KP/67D kw;Wk; KP/68 ஆகிய கிராமசேவகர் பிரிவுகள்) மொத்தம் 08 கிராமசேவகர் பிரிகள் அடங்குகின்றன. பெரியநீலாவணை முஸ்லிம் பிரிவும் மருதமுனைக் கிராமமும் அருகருகே நிலத்தொடர்புள்ளவை. இதன் மொத்த சனத் தொகை (100% முஸ்லிம்) 17,433 ஆகும். அதாவது மேலே குறிப்பிட்ட 15 முஸ்லிம் பெரும்பான்மைக் கிராம சேவகர் பிரிவுகளில் இந்த 8 கிராம சேவகர் பிரிவுகள் மட்டுமே நிலத்தொடர்புள்ளவை. இதனைத் தனியானதொரு பிரதேச செயலகப் பிரிவாக (இல: 1) உருவாக்கமுடியும்.

தொடர்ச்சி... (பக்கம் -12)

# இனக்கலவரத்துக்கு அடித்தளமிடும் கல்முனைப் போராட்டங்கள்

கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தரமுயர்த்தல் தொடர்பாக தமிழர்களால் ஆரம்பிக்கப்பட்ட உண்ணாவிரதப் போராட்டம் ஞானசார தேரரின் தலையீட்டினால் தற்காலிகமாக முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளமை ஆறுதல் தரும் விடயமாக இருக்கின்றது. ஏனெனில் தமிழர் தரப்புப் போராட்டத்துக்கு எதிராக முஸ்லிம்களால் ஆரம்பிக்கப்பட்ட சாத்வீகப் போராட்டம் இரு இனங்களையும் இனக்கலவரத்துக்கான கத்திமுனையில் நிறுத்தியிருந்தது. மற்றொரு புறம் உண்ணாவிரதம் இருந்தவர்களின் உயிருக்கு ஏதாவது ஏற்பட்டிருக்குமாயின் அதுவும் ஒரு பாரிய இனக்கலவரமாக உருவாகியிருக்கும். எனவே தமிழ், முஸ்லிம் இனங்கள் ஒரு இனக்கலவரத்துக்கான விளிம்புவரை சென்று திரும்பியிருக்கிறார்கள் என்றே கூறவேண்டும்.

இது இலங்கையின் அனைத்து மக்களுக்கும் உவப்பான விடயமல்ல. கடந்தகால யுத்த வடுக்களும் மனக்கசப்புகளும் பழிவாங்கல்களும் ஆறிவரும் நிலையில் சாதாரணமான நிர்வாக அலகு ஒன்று, சில முஸ்லிம் அரசியல்வாதிகளினுடைய அரசியல் இலாபங்களுக்காக முஸ்லிம்களுடைய தாயகப் பிரச்சனையாகவும் வாழ்விடப்பிரச்சினையாகவும் கதையாடல்கள் உருவாக்கப்பட்டு மூவின மக்களையும் ஒரு இன வன்முறைக்கு சிலரால் இழுத்துக் கொண்டு வருவதை மூவினத்து




மக்களும் மிகவும் நிதானமாக பக்கச்சார்பின்றி விளங்கிக் கொள்தல் வேண்டும்.

பாராளுமன்ற உறுப்பினர்களான ஹரிஸ், அமீர் அலி, முன்னாள் கிழக்குமாகாண ஆளுநர் ஹிஸ்புல்லா போன்றவர்களால் இனவன்முறைக்கான தூபம் இடப்படுவதான சந்தேகம் தமிழ் மக்களிடம் உண்டு. இவர்கள் தமிழர்களுக்கு எதிரான முஸ்லிம்களின் சாத்வீகப் போராட்டத்துக்குச் சென்று ஆதரவு தெரிவித்திருந்தார்கள்.

பாராளுமன்ற உறுப்பினர் ஹரிஸ் அவர்கள் பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது 'அந்தப் பிரதேச செயலகத்தை புலிகள்தான் உருவாக்கினார்கள், முஸ்லிம்களின் காணிகள், வீடுகள், வர்த்தக நிலையங்கள் எல்லாம் அபகரித்துவிட்டனர்' எனக் கூறியதோடு 'சிங்களவர்களை கடுமையாக விமர்சிக்கும் போது அவர்களுக்குப் புரியாத தமிழ் மொழியிலும் தமிழர்களை புலிகளுடன் தொடர்புபடுத்தி விமர்சிக்கும் போது சிங்கள மொழியிலும் பேசும் 'மொழி' அரசியலை ஹரிஸ் எம்.பி.பயன்படுத்தினார்' என ஊடகமொன்று குறிப்பிட்டிருந்தது.

இந்த மொழி அரசியல் பயன்பாட்டில் அவருடைய அரசியல் நேர்மையீனத்தை வெளிப்படுத்தியிருக்கின்றார்.

## கல்முனையில் தமிழர் எவ்வாறு சிறுபான்மையாக்கப்பட்டார்கள்?

ஒரு பிரதேச செயலகத்தினை உருவாக்கும் அதிகாரம் யாருடையது அப்பொறிமுறைகள் எவ்வகையானது என்பதை ஒரு பாராளுமன்ற உறுப்பினரான ஹரிஸ் நன்கு அறிவார். அப்படியிருந்தும் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தினை புலிகள்தான் உருவாக்கினார்கள் என்று அவர் தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு பொருத்தமற்ற வகையில் உரையாற்றியுள்ளார்.

இன்னும் சிலர் வரதராஜப்பெருமாள் வடகிழக்கின் முதலமைச்சராக இருந்தபோது ஆயுதமுனையில் உருவாக்கியதாக சமூகவலைத்தளங்களில் எழுதுகிறார்கள். மத்திய அரசிடமுள்ள பிரதேச செயலக அதிகாரத்தினை மாகாணசபைக்குரியதாக காட்டி வரதராஜப்பெருமாளால் உருவாக்கப்பட்டது என்றும் புலிகளால் உருவாக்கப்பட்டது என்றும் கூறுவதன் மூலம் நிர்வாகப் பொறிமுறை தொடர்பாகத் தெரியாத அப்பாவி முஸ்லிம், சிங்கள மக்களை தமிழ்மக்களுக்கு எதிராக தூண்டிவிட முயற்சிக்கின்றார் என்பதுதான் அர்த்தமாகும். இல்லாவிட்டால் இவ்வாறு உண்மைக்குப் புறம்பாக கூறவேண்டிய அவசியமில்லை.

இதுபோன்றே இனவாத ரீதியில் நிந்தவூரில் இருந்து காரைதீவு பிரிந்த போது அதற்குள் மாவடிப்பள்ளி, மாளிகைக்காடு எனும் முஸ்லிம் கிராமங்கள் உள்ளடங்கியது என்றும் அக்கரைப்பற்றிலிருந்து ஆலையடிவேம்பும், சம்மாந்துறையிலிருந்து நாவிதன்வெளியும் பிரிந்த போது முஸ்லிம்கள் ஆட்சேபனை எதுவும் தெரிவிக்கவிக்காமல் தமிழர்களுடன் சேர்ந்து சென்றோம் என்று ஒருபக்கச் சார்பாக எழுதுகிறார்கள்.

நிந்தவூரில் இருந்து காரைதீவு பிரிந்த போது மாவடிப்பள்ளி, மாளிகைக்காடு எனும் முஸ்லிம் கிராமங்களை எடுத்துவிட்டார்கள் எனக்கூறுபவர்கள் நிந்தவூர் பிரதேச செயலகப் பிரிவுக்குள்தான் அட்டப்பள்ளம் என்கின்ற தமிழ் கிராமம் இருப்பதை மறைத்து விடுகிறார்கள், அக்கரைப்பற்றிலிருந்து ஆலையடிவேம்பை பிரித்ததாகக் கூறுபவர்கள் அதே அக்கரைப்பற்றில் இருந்துதான் முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட அட்டாளச்சேனை பிரதேச செயலகப் பிரிவு உருவாக்கப்பட்டதும் அந்தப் பிரிவுக்குள் திராய்க்கேணி, மீனோடைக்கட்டு எனும் தமிழ் கிராமங்கள் உள்வாங்கப்பட்டு தற்போது மீனோடைக்கட்டு எனும் தமிழ் கிராமம் முஸ்லீம்மயமாக்கப்பட்டு இல்லாமல் செய்யப்பட்டு விட்டது என்பதனை மறைத்துவிடுகிறார்கள். சம்மாந்துறையில் இருந்து நாவிதன்வெளியைப் பிரித்ததைச் சுட்டிக்காட்டுபவர்கள் அதே சம்மாந்துறையிலிருந்துதான் முஸ்லிம்களை பெரும்பான்மையாகக் கொண்ட இறக்காமம் பிரதேசச் செயலகப் பிரிவு உண்டாக்கப்பட்டதையும் அந்தப் பிரிவுக்குள் மாணிக்கமடு என்னும் தமிழ் கிராமம் இருப்பதையும் மறைத்து விடுகிறார்கள். இது போலவே பொத்துவில் முஸ்லிம் பெரும்பான்மைப் பிரதேச செயலகப் பிரிவுக்குள் பல தமிழ் கிராமங்கள் இருப்பதை மறைத்துவிடுகிறார்கள்.

மேற்கூறப்பட்ட இடங்களிலெல்லாம் தமிழர்கள் 'எங்களை தமிழர்களை பெரும்பான்மையாகக் கொண்ட பிரதேச செயலகங்களுடன் இணைத்து விடுங்கள் நாங்கள் முஸ்லிம்கள் பெரும்பான்மையாகக் கொண்ட பிரதேச செயலகப் பிரிவுகளில் வாழமாட்டோம்' என்று போராடவில்லை. ஏனெனில் தமிழர்களும் முஸ்லிம்களுடன் சேர்ந்துவாழத்தான் விரும்புகிறார்கள் சேர்ந்துதான் வாழ்கிறார்கள்.

ஆனால் அரசியல்வாதிகள்தான் தங்களுடைய இலாபங்களுக்காக இந்த மக்களை பிரித்து ஆள நினைக்கிறார்கள். இந்தப் பிரித்து ஆளுகையின் வெளிப்பாடுதான் 30 வருடங்களாக கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தினை தரம் உயர்த்த விடாது தடுக்கின்ற முஸ்லிம் அரசியல்வாதிகளின் செயற்பாடாகும்.

இந்த அரசியல்வாதிகளினால் முன்வைக்கப்படும் மற்றுமொரு வரலாற்றுத் திரிபு கல்முனை முஸ்லிம்களின் பாரம்பரிய வர்த்தக நகர் என்பதும். அதனை நிர்வாக ரீதியாக கைப்பற்றுவதற்கான நயவஞ்சகப் போராட்டமே தமிழர்களுடையது என்பதாகும்.

'கல்முனை மற்றும் கல்முனைக்குடி என்பன இரு வெவ்வேறு தனிக்கிராமங்களாகும். மட்டக்களப்புக் கச்சேரியிலுள்ள பதிவேடுகளின்படி கல்முனைப்பட்டினமானது ஆரம்பத்தில் நூறு வீதம் தமிழர்களையே கொண்டிருந்தது............ கல்முனைப் பட்டினத்தின் வடக்கு எல்லை தாளவட்டுவான் வீதியும் தெற்கு எல்லை தரவைப்பிள்ளையார் கோயில் வீதியும் ஆகும்.

**எழுவான் வேலன்**

அக்காலத்தில் பொதுமராத்து இலாகாவினால் (Public work Department) நிர்மாணிக்கப்பட்ட கல்முனை பெயர்ப் பலகை முன்பு தரவைப்பிள்ளையார் கோயிலுக்கு அருகில் இருந்த இப்பெயர்ப் பலகை அப்போதைய கல்முனைத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் (முஸ்லிம்) அனுசரணையுடன் திட்டமிட்ட முறையிலே தெற்கு நோக்கி கல்முனை சாகிராகல்லூரி வளவுக்கு முன்னால் நகர்த்தப்பட்டது. கல்முனைக்குடியை கல்முனையுடன் இணைத்து எதிர்காலத்தில் முஸ்லிம் பெரும்பான்மைக் கிராமமான கல்முனைக்குடியையும் கல்முனையின் பகுதியாக சித்திரித்துக் கல்முனைப் பட்டினத்தில் தமிழர்களை சிறுபான்மையாக்கும் திட்டத்தின் முதல் அங்கமே மேற்கூறப்பட்ட பெயர்ப்பலகை நகர்த்தப்பட்ட நிகழ்வாகும்.

கல்முனைப் பட்டினம் 1892ம் ஆண்டின் 18ம் இலக்க கட்டளைச் சட்டத்தினால் நிறுவப்பட்ட உள்ளூர்ச் சபை ஒன்றினால் (Sanitary Board) நிர்வகிக்கப்பட்டது. 1947வரை கல்முனை 3 கிராமசேவையாளர் பிரிவுகளை (குறிச்சிகளை) கொண்டிருந்தது.


இம்மூன்று குறிச்சிகளும் (1ம்,2ம்,3ம், குறிச்சிகள்) தமிழர்களையே கொண்டிருந்தன. பின்பு 1946ம் ஆண்டின் 3ம் இலக்க பட்டினசபைகள் சட்டத்தின் பிரகாரம் 'Sanitary Board ' க்குப் பதிலாக கல்முனைப் பட்டினசபை (Town Council) உருவாக்கப்பட்ட போது கல்முனைக்குத்

தொடர்ச்சி... (பக்கம் -15)

# 'வாழும் மனிதம் ' வரலாற்று ஆவணம் -நூலறிமுகம்

## (மட்டக்களப்பின் இன்னுமொரு ஆளுமை நல்லையா மாஸ்டர் )

கிழக்கிலங்கையில் இருந்து தேசிய அளவில் கால்பதித்த மிகப்பெரும் ஆளுமை யாரென்றால் எமெக்கெல்லாம் உடனடியாகவே ஞாபகம் வருவது முத்தமிழ் வித்தகர் விபுலானந்தரின் பெயரே ஆகும்.




அதேபோன்று விபுலானந்தருக்கு பிறகு கிழக்கு மண் பெற்றெடுத்த மிகப்பெரும் ஆளுமை வி.நல்லையா மாஸ்டர்தான் என்றால் அறிவு புலத்தில் அதை மறுப்பார் யாருமிலர். ஆனால், அவை ஆவணப்படுத்தப்படவில்லை. இது ஒரு குறைபாடு மட்டுமல்ல. தமிழரின் வரலாற்றெழுதியலில் ஒரு மாபெரும் கறையுமாகும். அதிகாரங்களை வைத்திருப்பவர்களே வரலாறுகளை தீர்மானிப்பவர்களாக இருக்கின்றார்கள் என்பதனாலோ என்னவோ "மட்டக்களப்பின் நவயுக சிற்பி" என்று புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை அவர்களால் புகழப்பட்ட அந்த நாயகன் நல்லையா அவர்களின் வாழ்வு இன்றுவரை தமிழ் சூழலில் ஆவணமாக்கப்படவில்லை.

ஆனால் நல்லையா மாஸ்டர் இறந்து சுமார் நாற்பது வருடங்களுக்கு பின்னராவது அந்த வடு இப்போது துடைக்கப்பட்டிருக்கின்றது. அமரர் நல்லையா நினைவுப் பணி மன்றத்தினரின் அயராத உழைப்பு "வாழும் மனிதம் " என்னும் தலைப்பில் அதனை சாத்தியமாக்கியுள்ளது. சுமார் 235 பக்கங்களில் விரிகின்ற இந்த நூல் அரிய பல தகவல்களடங்கிய ஒரு வரலாற்று ஆவணமாக வெளிவந்துள்ளது.

சுமார் 15 பெறுமதிமிக்க கட்டுரைகள், 09 நினைவுக்குறிப்புக்கள், பாராளுமன்ற உரைகள், மற்றும் நிழல் படங்கள் என மிக கனதியானதொரு தொகுப்பாக இந்நூல் தொகுக்கப்பட்டுள்ளது. எழுத்துக்கும் வார்த்தைக்கும் இல்லாத வசீகரமும் பன்முக பரிமாணமும் மட்டுமல்ல காலப்பெருவெளியின் மிகநுண்ணிய கணங்களைக்கூட இழுத்துவந்து எம் கண்முன்னே கொண்டு நிறுத்தும் அசாத்திய சக்தியும் கூட நிழல்படங்களுக்கேயுண்டு . அந்த வகையில் இத்தொகுப்பின் இறுதியில் சுமார் 35 பக்கங்களுக்கு மேல் இடம்பிடித்திருக்கும் நிழற்படங்கள் பேசுகின்ற வரலாறுகள் அலாதியானவை.

திருகோணமலை இராமகிருஷ்ண மிஷன் பள்ளியின் ஆசிரியப்பணியில் தொடங்கிய அவரது பொதுவாழ்வு மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலயம், அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சி கலாசாலையின் முதலாவது அதிபர் என்று கிழக்கிலங்கையெங்கும் எவ்வகையில் வியாபித்தது?
இராமகிருஷ்ண மிஷனுடன் அவருக்கிருந்த ஈடுபாடுகள் எப்படியானவை? ஆசிரியராக இருந்த நல்லையா அவர்கள் அரசியலில் கால்பதிப்பதன் ஊடாக பெரும்பணியாற்ற முடியும் என்று அவருக்கு ஆசி வழங்கிய துறவி விபுலானந்தரின் தூரநோக்கு பற்றிய பல தகவல்கள் இக்கட்டுரைகளில் காணக்கிடக்கின்றது.

முதல் முதலாக மட்டக்களப்பு நகரசபை உறுப்பினராக தெரிவானதோடு தனது அரசியல் வாழ்வில் காலடிவைத்த நல்லையா மாஸ்டர் கிழக்கிலங்கையின் (வடக்கு பகுதி) சார்பான அரச சபை (செனட்) உறுப்பினராகி பின்னர் பாராளுமன்ற உறுப்பினராகவும் பிரதியமைச்சராக, அமைச்சராக என்று அரசியல் வானில் உச்சம் வரை பிரகாசித்துள்ளார். தான் வகித்த ஒவ்வொரு பதவியிலும் அவர் பெருமையடைந்தாரோ இல்லையோ அந்த பதவிகள் அவரால் பெருமையடைந்தன என கூறும் அளவிற்கு புகழடைந்திருக்கின்றன. அமெரிக்காவின் துணை ஜனாதிபதியாக ரிச்சர்ட் நிக்ஸன் இலங்கைக்கு வருகைதந்த வேளையில் அன்றைய பிரதமர் சேர்.ஜோன். கொத்தலாவலையின் பிரதிநிதியாக நல்லையா அவர்களே விமான நிலையம் சென்று அவரை வரவேற்றிருக்கின்றார் என்கின்ற தகவல்களெல்லாம் இலங்கை அரசியல் அதிகார மையங்களில் அவர் செலுத்திய ஆளுமையை பறைசாற்றி நிற்கின்றன.

ஐ நாவில் பேசிய முதல்தமிழன், ஐ நாவில் பேசிய கடைசி தமிழன் என்கின்ற தமிழ் வரலாற்று புனைவுகளால் நிரம்பிக்கிடக்கின்றன எமது செவிப்பறைகள். இந்த ஆலாபனைகளையெல்லாம் கேலிகூத்தாக்கிவிட இத்தொகுப்பில் காணப்படுகின்ற ஒரேயொரு புகைப்படமே போதுமானதாயிருக்கின்றது. 1951ம் ஆண்டிலே இலங்கை நாட்டின் பிரதிநிதியாக ஜநாவில் அமர்வில் பங்கெடுத்து உரையாற்றிய இந்த மட்டக்களப்பு நல்லையாவின் அந்த அரிய புகைப்படம்தான் இந்த தொகுப்புக்கே முத்தாய்ப்பாய் அமைந்திருக்கின்றது.

அதிகாரம் தன்னிடமிருந்த ஒவ்வொரு கணநேரமும் அவர் எப்படி அதை மக்களுக்காக பயன்படுத்தினார் என்பதை இந்நூலில் காணப்படுகின்ற கிழக்கிலங்கை எங்கும் அவர் ஆற்றிய பணிகளின் பட்டியல்கள் எடுத்தியம்புகின்றன. வாழைச்சேனை கடதாசி தொழிற்சாலை தொடங்கி மட்டக்களப்பு மாநகர மண்டபம், பிரதான தபால் அலுவலகம், மாவட்டத்தில் காணப்படுகின்ற பெரும்பாலான வைத்திய சாலைகள் மற்றும் மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயம் (தற்போதைய கிழக்கு பல்கலைக்கழகம்), மட்/கோட்டைமுனை மகாவித்தியாலயம்(தற்போதைய மட்/ இந்துக்கல்லூரி , வாழைச்சேனை மகா வித்தியாலயம் (இன்றைய வாழை / இந்து கல்லூரி)திருகோணமலை மகா வித்தியாலயம்(இன்றைய இந்துக்கல்லூரி) ,-----என்று கிழக்கிலங்கை எங்கும் சுமார் நூற்றுக்கு மேற்பட்ட அரசாங்க பாடசாலைகளின் ஸ்தாபகராகவும், நல்லையா என்கின்ற இந்த ஒரே மனிதனே செயல்பட்டிருக்கின்றான் என்னும் தகவல்களை வாசிக்கின்றபொழுது யாருக்கெல்லாம் சிலையெழுப்பி கொண்டாடும் நாம் இந்த மனிதனுக்கு மட்டக்களப்பு நகரின் மத்தியில் இன்றுவரை ஒரு சிலை எழுப்பி கொண்டாட வில்லையே? என்கின்ற வேதனையை தவிர்க்க

### அறுமக்குட்டிபோடி

முடியவில்லை. .
அது மட்டுமல்ல குளங்களின் புனரமைப்பு ஆகட்டும், நீர்ப்பாசன திட்டங்கள் ஆகட்டும் குடியேற்ற திட்டங்கள் ஆகட்டும் இன,மத,சாதி பேதமின்றி அவரது செயல்பாடுகள் அமைந்திருக்கின்றன. போடிமார்களால் ஒடுக்கப்பட்டு நிலமின்றி வாடிய ஏழை சமூகங்களின் மீட்பராக அவர் உருவாக்கிய விசேட குடியேற்ற




திட்டங்கள் இருந்திருக்கின்றன.தேசிய உடைமையாக்கல் கொள்கைகளோ நெற்காணி உச்சவரம்பு சட்டங்களோ அமுலாக்கபடுவதற்கு முன்பே விசேட பிரேரணைகள் மற்றும் வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம் பெரும் நிலச்சுவான்தார்களிடமிருந்து நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களை கையகப்படுத்தி அவற்றை ஏழைகளுக்கு பகிர்ந்தளிக்கும் கைங்கரியத்தை செய்திருக்கின்றார் என்றால் அவர்கொண்டிருந்த பொதுவுடைமை கொள்கைக்கு வேறு சான்றுகள் தேவையில்லை. அவ்வாறாக முஸ்லிம் மற்றும் பறங்கிய சமூகங்களுக்கென விசேட குடியேற்ற,வீடமைப்பு திட்டங்களை உருவாக்கியது மட்டுமன்றி பள்ளிவாசல்களைக்கூட கட்டித்தந்த பெருமானார் நல்லையா மாஸ்டர் என்று இன்றும் வாழக்கூடிய முஸ்லிம்களின் மூத்த பிரசைகள் இந்நூலில் பதிவு செய்திருக்கின்றனர்.

மேலும் மட்டக்களப்பு வாழ் முஸ்லிம்களின் வாக்குவங்கியானது நல்லையாவைத் தவிர வேறு யாருக்குமானதாய் இருக்கவில்லை என்கின்ற தகவல்கள் கிழக்குமாகாணம் கொண்டிருந்த இனநல்லிணக்க வரலாற்றின் சாட்சியமாய் இந்நூலினை இன்னுமொரு பரிமாணத்துக்கு இட்டு செல்கின்றது.

இலவச கல்வியை சனநாயகப்படுத்தலின் அவசியம் பற்றியும் சுயபாஷைகளுக்கான விவாதங்களின் போது தமிழையும் அரசகரும மொழியாக இணைத்துக்கொள்ளவேண்டியதன் அவசியம் பற்றியும் , அவர் ஆற்றிய உரைகள் இலங்கையின் பாராளுமன்ற வரலாற்றில் குறிப்பிட தக்கவையாகும். தமிழ் "பெருங்குடிகள்"வழிவந்த தலைவர்களெல்லாம் மக்கள் நலத்திட்ட மசோதாக்களை எதிர்த்துகொண்டும் சுதேச மொழி பிரேரணையை எதிர்த்துக்கொண்டு ஆங்கிலம் அகற்றப்படக்கூடாது என்று ஒற்றைக்காலில் நின்றபோது சுயபாஷைகளின் அவசியம் குறித்து அவர் முன்வைத்த வாதங்களும் அவற்றை எடுத்துரைக்கும் விதமும் தனித்துவமானவையாகும். அதனை இந்நூலில் காணக்கிடைக்கின்ற அவரது உரைகளின் பத்திகள் எடுத்தியம்புகின்றன.

அதுமட்டுமன்றி தமிழரசு கட்சியினரினதும் யாழ்ப்பாண தலைவர்களினதும் இனவாத அணிதிரட்டல்கள் பாரிய அவலநிலை ஒன்றை எதிர்கொள்ளவேண்டிய நிலைக்கு தமிழ் மக்களை இட்டுச்செல்லும் என்பதனை சுமார் 70வருடங்களுக்கு முன்பே தீர்க்கதரிசனமாக இந்த மனிதன் அழுத்தி பேசியிருக்கின்றான் என்பதை இந்த நூலில் காணப்படும் அவரது உரைகள் தெள்ளத்தெளிவாக காட்டுகின்றன.

1945ம் ஆண்டுகளில் தமிழர் வாழும் பிரதேசங்களில் இருந்த தீண்டாமைக்கொடுமைகள் சொல்லிலடங்காதவையாகும். ஆனால் அவ்வேளையில் அந்த ஒடுக்கப்பட்ட மக்கள் திரள் குறித்து மிக கரி சனைகொண்ட உரைகளை அவர் பாராளுமன்றில் ஆற்றியுள்ளார். "ஒடுக்கப்பட்ட சாதிகளான கட்டாடிகள், சிகைவெட்டுவோர், கூலியாட்கள் என்போருக்கெல்லாம் ஓய்வூதியம் கொடுப்பது அரசின் கடமை" என்று குரல் எழுப்பியவர் இந்த மட்டக்களப்பு நல்லையா மட்டுமேதான் என்றால் அது மிகையாகாது. இதே போன்று மலையக மக்களின் நிலை குறித்து மிக வேதனையுடன் அவர் சபையின் கவனத்தை ஈர்க்கும் உரைகளை ஆற்றியுள்ளார். வெற்று வீம்புகளும் வீரபிரதாபங்களும் பேசி பேசியே எத்தனையோ தமிழ்த் தலைமைகள் அறுபது எழுபது வருட காலங்களை வீணடித்து வருகின்ற நிலையில் வெறும் பதின்மூன்று வருடங்கள் மட்டுமே அதிகாரத்தில் இருந்த நல்லையா மாஸ்டர் இத்தனையையும் சாதித்திருக்கின்றார் என்பது அதிசயமே.

மேலும் இந்த நல்லையா மாஸ்டர் பற்றி மட்டக்களப்பின் மூதறிஞர் எஃப் .எக்ஸ். சி.நடராஜா அவர்கள் கலைச்செல்வி சஞ்சிகைக்கு 1994ல் வழங்கிய பேட்டியும் இந்நூலில் இணைக்கப்பட்டிருப்பது சிறப்பானதாகும். அதில் அவர் நல்லையா மாஸ்டரை விளிக்கின்ற விதம் அற்புதமானது. ஆம் அவர் சொல்வதுபோல "நல்லையா ஒரு கையூட்டு வாங்காத மெய்யாளனாக" வாழ்ந்திருக்கின்றார். இலங்கை அரசியல் வானில் உச்சநிலை தலைவர்களில் ஒருவராக இருந்த போதும் எத்தனையோ கோடி கோடியாக ரூபாய்களை மக்களின் சேவைக்காக கையாண்டபோதும் தனது இறுதி காலங்களில் ஒரு ஏழையாக வாடகை வீடொன்றில் வாழ்ந்து மறைந்திருக்கின்றார் அந்த தலைவர் என்பதை இந்நூல் தொகுக்கப்படாவிடின் இன்றைய

தொடர்ச்சி... (பக்கம் -15)

# படுவான் திசையில்

பக்க அனுசரணையாளர்:
" அலையப்போடி நல்லரெத்தினம் (ஸ்தாபகர்)
அறிவாலயம் அறக்கட்டளை நிதியம்
பண்டாரியாவெளி கொக்கட்டிச்சோலை "

## படுவான்கரையில் உதைபந்தாட்ட திருவிழாக்கள்

வாரத்தின் இறுதி நாட்களில் படுவான்கரைப் பிரதேசத்தில் உதைபந்தாட்டத் திருவிழாதான் என்கிறார் ஜீவிதன். மணற்பிட்டி சந்தியில் நின்ற கணேசன் காஞ்சிரங்குடா பக்கமாவிருந்து வருகைதந்த ஜீவிதனை இடைநிறுத்தி இந்தக்கிழமை



விளையாட்டில் எந்த கழகம் வென்றது என வினவினான். அதனைத்தொடர்ந்து இருவரும் விளையாட்டுப்பற்றிய தமது ஆதங்கங்களை கொட்டித்தீர்த்தனர்.

நீண்டு பரந்துகிடக்கின்ற படுவான்கரைப்பிரதேசத்தில் உள்ள, இளைஞர்கள் அதிகம் ஈடுபாடு காட்டும் விளையாட்டாக உதைபந்தாட்டம் உள்ளது. தமக்கு கிடைத்திருக்கின்ற



வளங்களை பயன்படுத்தி ஊருக்கொரு மைதானத்தினை அமைத்து, அல்லது திடல்கள், வயல்வெளிகளில் மாலைப்பொழுதில் தாம் பார்த்த உதைபந்தாட்டப் போட்டியை விளையாடி வருகின்றனர். படுவான்கரைப் பிரதேசத்தில் உள்ள ஒவ்வொரு கழகமும் தமக்குகிடைக்கின்ற வசதிக்கேற்ப சனி, ஞாயிறு தினங்களில் உதைபந்தாட்டப்போட்டியினை நடாத்தி வருகின்றனர். இப்போட்டி நிகழ்வுகள், இருநாள் திருவிழா போன்றே நடந்தேறி வருகின்றன. வருடத்தின் இறுதிப்பகுதியிலும், முதற்பகுதியிலும் பெய்கின்ற அடைமழையான காலப்பகுதியினை தவிர்த்து ஏனைய சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் படுவான்கரைப்பகுதியில் உள்ள ஏதோவொரு கிராமத்தில் உதைபந்தாட்டப்போட்டி நடைபெற்றுத்தான் ஆகின்றது. இரண்டு தசாப்தங்களுக்கு முன்பு படுவான்கரைப் பிரதேசத்தில் குறிப்பிட்டளவிலான கழகங்கள் மாத்திரமே விளையாடியும் வந்தன. இப்போது பல கழகங்கள் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதேநேரம் ஒரே கிராமத்தில் பல அணிகளும் உள்ளன.

படுவான்கரைப் பகுதியில் உள்ள இளைஞர்களைப் பொறுத்தவரை சனி, ஞாயிறு தினங்கள் என்றாலே மகிழ்ச்சியான நாளாக கருதுவதுடன், விளையாட்டு நடைபெறும் இடங்களைத் தேடிச்செல்கின்றனர். இதன் மூலமாக உதைபந்தாட்டப் போட்டியில் இளைஞர்கள் கொண்டுள்ள ஈடுபாடு வெளிப்படுத்தப்படுகின்றது. விளையாட்டில் ஈடுபட வேண்டும் என்ற ஆதங்கமும், ஏனைய கழகங்களை வெல்ல வேண்டுமென்ற மனநிலையும் திடமாக கொண்டுள்ளனர். இதனால் தமது உடலங்கங்களையும் கருதாது, விளையாடி, அதன்மூலமாக கால்முறிவு, கைமுறிவு போன்ற பல்வேறு உபாதைகளுக்கும் ஆளாகியுமுள்ளனர். ஆனாலும் விளையாட்டிலிருந்து விலகியிருப்பதற்கு மனமில்லாதவர்களாகவே இருக்கின்றனர். இவ்விளையாட்டிற்கான ரசிகர்களும் படுவான்கரைப் பிரதேசத்தில் அதிகமாக காணப்படுகின்றனர். வார இறுதிநாட்களைத் தவிர ஏனைய நாட்களில் ஏதோவொரு தொழிலினை செய்துவிட்டு வார இறுதியில் விளையாட்டில் ஈடுபடுகின்றனர். இவ்வாறு விளையாட்டு வீரர்கள் பற்றி மௌனகுரு கூறினான்.

மைதானங்களைப்பற்றி கூற ஆரம்பித்த ஜீவிதன், 'மைதானங்கள் பல கிராமங்களில் அமைந்துள்ளதுதான், ஆனாலும் உதைபந்தாட்ட மைதான அளவிற்கு ஏற்ப, ஒருசில மைதானங்களே அமையப்பெற்றுள்ளன. மைதானங்களை அபிவிருத்தி செய்வதற்கான நிதிவசதிகள் இன்மையே மைதானங்கள் முறையாக அமைக்கப்படாமைக்கும் காரணமாகின்றது. படுவான்கரைப்பிரதேசத்தில் உள்ள பெரும் மைதானமாக மகிழடித்தீவு பொது விளையாட்டு மைதானம் அமைந்துள்ளது. இவ்விளையாட்டு மைதானத்தில் சில வேலைகள் நடைபெற்றிருக்கின்றதே தவிர, குறிப்பாக சுற்றுமதில் கட்டப்பட்டுள்ளது, ஆனால் முற்றுப்பெறவில்லை. இம்மைதானத்தினை நவீன வசதிகளுடன் கூடிய மைதானமாக மாற்றுவதற்கு பல்வேறு அபிவிருத்திகளை செய்யவேண்டியுள்ளது. அவ்வாறான அபிவிருத்திப்பணிகளை மேற்கொள்கின்ற போது, மாவட்டத்தில் சிறந்த மைதானமாகவும் மகிழடித்தீவு பொது விளையாட்டு மைதானம் மாற்றமுறுவதற்கும் சந்தர்ப்பமுள்ளது. இதனை மாற்றியமைக்க வேண்டியதும் காலத்தின் தேவையுமாகும்.'

படுவான்கரைப்பிரதேசத்தில் உள்ள மகிழடித்தீவு பொது விளையாட்டு மைதானத்தினை அபிவிருத்தி செய்து, படுவான்கரைப்பிரதேசத்தில் இருக்கின்ற இளைஞர்களுக்கு உதைப்பந்தாட்டப்போட்டியின் நுட்ப பயிற்சிகளை வழங்குகின்ற போது சிறந்த விளையாட்டு வீரர்களை உருவாக்கமுடியும். இங்குள்ள விளையாட்டு வீரர்கள் சிறப்பாக விளையாடக்கூடியவர்களாகவிருந்தும் நுட்பமுறையில்

**படுவான் பாலகன்**

தவறிழைக்கின்றமையினாலேயே இவர்களது திறமைகளும் மைதானங்களுக்குள்ளேயே மழுங்கடிக்கப்படுகின்றன. அவ்வாறு பயிற்சி அளிக்கின்ற போது, தேசியமட்ட அணிகளிலும் பங்கெடுப்பதற்கான வாய்ப்பினை பெற்றுக்கொள்வர்.

விளையாட்டு ரீதியாக தேசிய, மாகாணமட்டங்களில் சாதிக்கின்ற போது, வேலைவாய்ப்புக்களையும் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பத்தினை பெறுவர். இதன்மூலமாக தமது குடும்ப வாழ்வாதாரத்தினை கொண்டுசெல்வதற்கான இலகு வழியினைப்பெற்றுக்கொள்வர். இன்று உதைபந்தாட்ட நடுவர் சம்மேளனங்களில் நடுவர்களாக இருப்பவர்கள் அனேகர் நகர்புறத்தினை அண்டியவர்களாகவே உள்ளனர். இதற்கு படுவான்கரைப்பிரதேசத்தில் உள்ள இளைஞர்களுக்கான சந்தர்ப்பங்களை வழங்கியமை குறைவே காரணமாகும். ஆனாலும், தற்காலத்தில் நடுவர்களுக்கான பரீட்சைகளை எழுதி அவற்றிலே சித்தியடைந்து பயிற்சி நடுவர்களாக கடமையாற்றுகின்றனர். காலப்போக்கில் பலர் இன்னும் நடுவர்களாக உருவாவதற்கு சந்தர்ப்பமுள்ளது. இந்நிலையில் படுவான்கரைப்பிரதேசத்தில் தோன்றியுள்ள கழகங்களையும் விளையாட்டு வீரர்களையும் ஊக்கப்படுத்தி, அவர்களுக்கான பயிற்சிகளையும் வழங்கி, மைதானங்களையும் அபிவிருத்தி செய்து, விளையாட்டு உபகரணங்களையும் வழங்குகின்ற போது சிறந்த விளையாட்டு வீரர்களை உருவாக்க முடிவதோடு, ஆரோக்கிய சமுகத்தினையும் உருவாக்க முடியும் எனக்கூறியவனாக ஜீவிதன் அவ்விடத்திலிருந்து அகன்றான்.

உதிரியாக ஒரு தகவல், இங்குள்ள இரு பெண்கள் அணிகள் (பன்சேனை மற்றும் அம்பிளாந்துறை) மாகாண மட்டத்தில் சாதித்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. இவர்களுக்கு உதவ அரங்கம் நிறுவனம் பல முயற்சிகளைச் செய்து வருகின்றது.

# விளையாட்டு

## கிரிக்கட் உலகக் கிண்ணம் 2019

### உலகக் கிண்ணத் தொடரில் சுவாரஸ்யத்தை ஏற்படுத்திய இங்கிலாந்து அணி

உலகக் கிண்ண கிரிக்கட் தொடரானது இதுவரை 32 போட்டிகள் நிறைவுற்ற நிலையில் இரண்டு அணிகள் அரையிறுதிப் போட்டிக்கான வாய்ப்பை இழந்தும் இரண்டு அணிகள் அரையிறுதிக்கான வாய்ப்பினை ஏறக்குறைய உறுதிசெய்த நிலையிலும் மூன்றாம் மற்றும் நான்காம் அணிகளுக்கான போட்டியில் ஆறு அணிகள் போராடும் இறுதிக்கட்ட சுவாரஸ்ய நிலையினையும் எட்டியுள்ளது.

### சுவாரஸ்யத்தை ஏற்படுத்திய இங்கிலாந்து அணியின் தோல்வி



ஆரம்பத்தில் மழை காரணமாக சில போட்டிகள் கைவிடப்பட்டும் மற்றும் லீக் போட்டிகள் முடிவடைய முன்னரே ஒருசில அணிகள் அரையிறுதி வாய்ப்பினை உறுதிசெய்தமை போன்று மந்தமாக சென்று கொண்டிருந்த நிலையில் கிண்ணம் வெல்லக்கூடிய அணிகளில் ஒன்றாக கருதப்பட்ட இங்கிலாந்து அணி தொடர்ச்சியாக இலங்கை மற்றும் அவுஸ்திரேலியா அணிகளுடனான போட்டியில் தோல்வியுற்றதனால் தற்போது அரையிறுதிக்கு தெரிவில் உலகக் கிண்ணத் தொடரானது விறுவிறுப்பான கட்டத்தை நோக்கி நகருகிறது.

### அரையிறுதிக்கு வாய்ப்புள்ள அணிகள்

அரையிறுதிச் சுற்றுக்கு தெரிவாகியுள்ள ஒரே அணியாக நடப்பு சம்பியனான அவுஸ்திரேலிய அணி காணப்படுவதோடு அவ்வணி தாம் விளையாடி 7 போட்டிகளில் 6 இல் வெற்றி பெற்று புள்ளிகள் நிலையில் முதலிடத்தில் காணப்படுகிறது. இரண்டாம் நிலையில் காணப்படும் நியூசிலாந்து அணி இதுவரை 6 போட்டிகளில் பங்கு பற்றி 5 இல் வெற்றி பெற்று ஒரு போட்டியில் மழை காரணமாக முடிவுகள் பெறப்படாத நிலையில் 11 புள்ளிகளுடன் ஏறக்குறைய அரையிறுதிக்கான வாய்ப்பினை உறுதிசெய்துள்ள நிலையில் காணப்படுகிறது. மூன்றாம் இடம் முதல் எட்டாம் இடம் வரை முறையே காணப்படும் இந்தியா, இங்கிலாந்து, பங்களாதேஸ், இலங்கை, பாகிஸ்தான் மற்றும் மேற்கிந்திய தீவுகள் ஆகிய அணிகள் அரையிறுதிக்கான இடத்தை அடைவதற்கு போராட வேண்டிய நிலையில் காணப்படுகிறது. எனினும் இவற்றுள் இந்தியா அணி 5 போட்டிகளில் பங்கு பற்றி ஒரு போட்டியிலும் தோல்வியடையாத நிலையில் 9 புள்ளிகளுடன் இன்னும் 4 போட்டிகள் எஞ்சியுள்ள நிலையில் அரையிறுதிக்கான வாய்ப்பினை தக்கவைத்துக்கொள்ளக் கூடிய நிலையில் காணப்படுகிறது. ஏனைய 5 அணிகளும் அரையிறுதிக்கான வாய்ப்பினை பெறுவதற்கு

இனிவரும் அனைத்து போட்டிகளிலும் வெற்றிபெற வேண்டிய கட்டாயத்தில் காணப்படுகிறது. எனினும் அவற்றுள் மேற்கிந்திய தீவுகள் அணிக்கான வாய்ப்பு மிகவும் குறைவாகவே காணப்படுகிறது. அவ்வணி இதுவரை விளையாடியுள்ள 6 போட்டிகளில் ஒன்றில் மாத்திரம் வெற்றி பெற்று, ஒரு போட்டி மழை காரணமாக முடிவுகள் பெறப்படாத நிலையில் 3 புள்ளிகளுடன் காணப்படுகிறது.

இதற்கமைவாக இம் முறை உலகக் கிண்ணத் தொடரில் அரையிறுதிப் போட்டிக்கான தகுதியினை அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, இந்தியா ஆகிய மூன்று அணிகள் உறுதி செய்துள்ள நிலையில் நான்காவது அணிக்கான இடத்தினையே இனிவரும் போட்டிகள் தீர்மானிக்கவிருக்கின்றன.

### இலங்கை அணிக்கான அரையிறுதி வாய்ப்பு?

இலங்கை அணி தற்போது 6 போட்டிகளில் விளையாடி 2 இல் வெற்றி பெற்று 2 போட்டிகள் மழை காரணமாக முடிவுகள் பெறப்படாத நிலையில் மொத்தமாக 6 புள்ளிகளுடன் 6ஆம் இடத்தில் காணப்படுகிறது. மீதமுள்ள 3 போட்டிகளிலும் வெற்றி பெறும் பட்சத்தில் 12 புள்ளிகளுடன் அரையிறுதிக்கான வாய்ப்பினை உறுதி செய்துகொள்ள முடியும். எனினும் அதே சந்தர்ப்பத்தில் இங்கிலாந்து அணியும் தமக்கு மீதமுள்ள 2 போட்டிகளிலும் வெற்றி பெறும் பட்சத்தில் அவ்வணியும் 12 புள்ளிகளுடன் காணப்படுகின்ற சந்தர்ப்பத்தில் நிகர ஓட்ட விகிதத்தினடிப்படையிலேயே அரையிறுதிக்கான இடம் தீர்மானிக்கப்படும். தற்போதைய நிலையில் நிகர ஓட்ட விகிதத்தில் பின்தங்கிய நிலையில் காணப்படும் இலங்கை அணிக்கு இது சாத்தியமற்றதாகவே காணப்படும். எனவே அரையிறுதிக்கான வாய்ப்பினை பெற்றுக்கொள்வதற்கு இலங்கை அணி மீதமுள்ள போட்டிகளில் வெற்றி பெற வேண்டியதோடு இங்கிலாந்து அணி தோல்வியடைய வேண்டியதும் அவசியமாகும்.

### 32 போட்டிகளின் முடிவில் அணிகளின் புள்ளி நிலை

| அணிகள் | போட்டிகள் | வெற்றி | தோல்வி | முடிவுபெறாதது | புள்ளிகள் | நிகர ஓட்ட விகிதம் |
|---|---|---|---|---|---|---|
| அவுஸ்திரேலியா | 7 | 6 | 1 | 1 | 12 | +0.906 |
| நியூசிலாந்து | 6 | 5 | - | - | 11 | +1.306 |
| இந்தியா | 5 | 4 | - | 1 | 9 | +0.809 |
| இங்கிலாந்து | 7 | 4 | 2 | - | 8 | +1.051 |
| பங்களாதேஸ் | 7 | 3 | 3 | 1 | 7 | -0.133 |
| இலங்கை | 6 | 2 | 2 | 2 | 6 | -1.119 |
| பாகிஸ்தான் | 6 | 2 | 3 | 1 | 5 | 1.265 |
| மேற்கிந்திய தீவுகள் | 6 | 1 | 4 | 1 | 3 | +0.190 |
| தென்னாபிரிக்கா | 7 | 1 | 5 | 1 | 3 | -0.324 |
| ஆப்கானிஸ்தான் | 7 | - | 7 | - | 0 | -1.634 |





### தென்னாபிரிக்கா அணியின் பரிதாப நிலை

இதுவரை இடம்பெற்று முடிந்த போட்டிகளின் முடிவுகளுக்கமைய ஆப்கானிஸ்தான் மற்றும் தென்னாபிரிக்கா அணிகள் அரையிறுதிப் போட்டிக்கான வாய்ப்பினை இழந்த அணிகளாக காணப்படுகின்றன. தொடரில் இதுவரை 7 போட்டிகளில் பங்கு பற்றியுள்ள ஆப்கானிஸ்தான் அணி அவை அனைத்திலும் தோல்வியுற்று காணப்படுகிறது. உலகக் கிண்ணத் தொடர் ஆரம்பமாவதற்கு முன்னர் அரையிறுதி போட்டிக்கு தெரிவாகக் கூடிய அணிகளில் ஒன்றாக எதிர்பார்க்கப்பட்ட தென்னாபிரிக்கா அணி இதுவரை விளையாடியுள்ள 7 போட்டிகளில் ஓர் போட்டியில் மாத்திரம் வெற்றி பெற்று இரண்டு போட்டிகள் மீதமிருக்கும் நிலையிலே அரையிறுதிக்கான வாய்ப்பினை இழந்து பரிதாபகரமான நிலையில் காணப்படுகிறது.

அரங்கம் பத்திரிகையில் விளம்பரம் செய்ய சிறப்புத் தள்ளுபடி!
கால்பக்கம் - ரூபா 2500
அரைப்பக்கம் - ரூபா 5000
முழுப்பக்கம் - ரூபா 10,000
சிறுவிளம்பரங்கள் - ரூபா 200 மாத்திரமே

NELSON COLLEGE LONDON

NCL
NELSON COLLEGE LONDON

# Now Enrolling

Are you 18+
CALL US

Business Course:
0208 514 0033

Hospitality Management
0203 500 0239



## Why Us

We provide:

- One to One support
- Flexible Timetable
- National and international course-based events & tours
- Employer introduction
- Job placement

## Courses

- HND Business
- HND Hospitality Management

- BA (Hons) Top Up in Business
- BA (Hons) Top Up in Hospitality Management

FIND OUT MORE
www.nelsoncollege.ac.uk

EMAIL US
info@nelsoncollege.ac.uk

IN PARTNERSHIP WITH

LONDON METROPOLITAN UNIVERSITY

Pearson

# உயர் கல்வி நிறுவகத்தில் வருகை தரு கலைஞர்களாக அண்ணாவிமார்: சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவக முன்னாள் பணிப்பாளரின் முக்கியமான பங்களிப்பு

மேற்கொள்ளப்பட்டுள்ள பாரம்பரியக் கலைஞர்கள் பல்கலைக்கழக பட்டதாரி மாணவர்களுக்குக் கற்பிப்பதற்கான வருகைதரு கலைஞர் எனும் உத்தியோகபூர்வ நியமனம் அமைந்துள்ளது எனலாம்.

இவ்விதம் பாரம்பரியக் கலைஞர்களை பல்கலைக்கழக மாணவர்களுக்கு உத்தியோகபூர்வ நியமன அந்தஸ்துடன்



இலங்கை கிழக்குப்பல்கலைக்கழகத்தின் சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளராகக் கடந்த மூன்று வருடங்களும், பதில் பணிப்பாளராக சுமார் ஆறு மாதங்களும் கடமையாற்றிய கலாநிதி சி.ஜெயசங்கர் அவர்கள் குறித்த நிறுவகத்திற்குப் புதிதாக பதில் பணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டதன் காரணமாக கடந்த 07.06.2019 ஆந் திகதி தனது பதில் பணிப்பாளர் கடமைகளை ஒப்படைத்து விட்டுத் தனது சேவையிடமான நுண்கலைத்துறைக்குத் திரும்பியுள்ளார்.

இச்சூழலில் கிழக்கின் குறிப்பாக மட்டக்களப்பின் பாரம்பரிய நிகழ்த்து கலைகள் சார்ந்த ஆய்வறிவுச் செயற்பாடுகளில் இயங்கிக் கொண்டிருக்கும் ஓர் ஆர்வலன் என்ற வகையில் கலாநிதி சி.ஜெயசங்கர் அவர்கள், சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளராகக் கடமையினை பொறுப்பேற்றதன் பின்னர் செய்த மிக முக்கியமான பணி குறித்து நன்றியுணர்வுடன் சில விடயங்களைக் குறிப்பிட வேண்டியது அவசியம் என எண்ணுகின்றேன்.

கலாநிதி சி.ஜெயசங்கர் அவர்கள் இலங்கையின் வட மாகாணத்தைச் சேர்ந்தவராயினும் அவருடைய சேவையிடம் மட்டக்களப்பாகவே இருந்து வருகின்றது. நாடகமும் அரங்கியலும் துறையினைச் சார்ந்த ஒரு புலமையாளராகவும், செயற்பாட்டாளராகவும் தன்னுடைய தொடர்ச்சியான செயற்பாடுகளூடாகத் தன்னை நிலைநிறுத்தியுள்ள இவர் கிழக்கின் நாடக அரங்கத் துறைக்கு ஆற்றியுள்ள பணிகள் நிறையவே உள்ளன. அவை குறித்து விவரமாக பிறிதொரு கட்டுரையில் குறிப்பிடுவதே பொருத்தமானது.

இங்கு நான் குறிப்பிட விரும்பும் விடயம் கலாநிதி சி.ஜெயசங்கர் அவர்கள் சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளராகப் பதவியேற்றதன் பின்னர் கிழக்கின் பாரம்பரியக் கலைஞர்களுக்கு வழங்கப்பட்ட மாண்பு தொடர்பாக மட்டுமேயாகும். அதாவது ஓர் உயர் கல்வி நிறுவகத்தில் வருகைதரு கலைஞர்களாக பாரம்பரியக் கலைகளில் நிபுணத்துவம் மிக்க அண்ணாவிமார்கள் சென்று பகுதி நேரங்களில் தமது கலை வித்துவங்களை மாணவர்களுக்குப் போதிப்பதற்கான உத்தியோகபூர்வ நியமனங்கள் இவருடைய காலத்தில் இவரின் அயராத முயற்சியினால் பல்கலைக்கழக கல்வி சார், கல்வி சாராத நிருவாக அமைப்புக்களின் அங்கீகாரத்துடன் வழங்கப்பட்டுள்ளன என்பதாகும்.

ஒரு பிராந்தியத்தின் பல்கலைக்கழகம் அப்பிராந்தியத்தின் சிறப்பியல்புகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து தனது கலைத்திட்டங்களை வடிவமைத்து கற்றல் கற்பித்தல் ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வது உலகளாவிய ரீதியில் பல்கலைக்கழக கல்வியின் பொதுவான இலட்சணமாக இருக்கும் பின்னணியில், கிழக்கிலங்கையின் அழகியற் கற்கைகள் நிறுவகம் என்ற வகையில் சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் கிழக்கிலங்கையினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாரம்பரிய நிகழ்த்து கலைகளுக்கு முக்கியத்துவம் வழங்கி இக்கலைகளைக் கற்பிக்கும் பகுதி நேர வளவாளர்களாக உத்தியோகபூர்வமான முறையில் அண்ணாவிமார்கள் அழைக்கப்படுவதற்கான முயற்சிகள்; மேற்கொள்ளப்பட்டிருந்தன.

நமது சூழலில் பயிலப்பட்டு வரும் பாரம்பரியக் கலைகளில், நிபுணத்துவம் மிக்க அண்ணாவிமார்களுக்கு பொன்னாடைகளும், புகழ் மாலைகளும் வழங்கி அவர்களைக் கௌரவம் செய்யும் நடவடிக்கைகளுடன், அவர்களை இன்னொரு வகையில் உயர் மதிப்பளித்து மாண்புபடுத்திய செயற்பாடாக அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள இந்த 'வருகைதரு கலைஞர்' எனும் உத்தியோகபூர்வ நியமனம் அமைந்துள்ளது எனலாம்.

காலனித்துவம் நம்மீது திணித்துள்ள கல்வி முறைமைகளும், ஆய்வு முறைமைகளும் நமது பாரம்பரிய அறிவு முறைமைகளையும், பாரம்பரியப் பண்பாடுகளையும் கீழ்மைப்படுத்தி மதிப்பிறக்கம் செய்து வருகின்ற சூழலில், இதற்கு மாற்றான காலனீய நீக்கச் செயற்பாடுகள் சுதேச அறிவு முறைகளையும் அவ்வறிவு முறைமைகளின் ஆதாரமாகவுள்ள பண்பாடுகளையும் காலத்தேவைக்கேற்ற விதத்தில் மீளுருவாக்கம் செய்து

துூ.கௌரீஸ்வரன்

பிரயோகத்திற்குக் கொண்டு வருவதற்கான முயற்சிகளை உலகந்தழுவி முன்னெடுத்து வருகின்றன.

இந்த வகையில் கிழக்கிலங்கையின் பாரம்பரியக் கலைகளின் ஆளுமைகளாக அடையாளங் காணப்படும் வடமோடி, தென்மோடி கூத்துக்களில் வித்துவம் மிக்க அண்ணாவிமார்கள் இக்கூத்துக்களைக் கற்பிப்பதற்கான பகுதி நேர கலைஞர்களாக அழகியற் கற்கைகள் நிறுவகத்திற்கு உத்தியோகபூர்வமாக அழைக்கப்பட்டு அவர்களுடைய சேவைகள் பெறப்பட்டு வருகின்றன. இதன் காரணமாக மாணவர்களும் அண்ணாவிமார்களும் இணைந்து புதிய காத்திரமான கூத்துக்கள் பலவற்றை மீளுருவாக்கி ஆற்றுகை செய்துள்ளனர்.

இலங்கைத் தமிழரின் பாரம்பரிய அரங்க அறிவியல் வரலாற்றில் பேராசிரியர் சுவாமி விபுலானந்தர், பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை, போராசிரியர் சு.வித்தியானந்தன் ஆகியோரால் முன்னெடுக்கப்பட்டு வந்த செயற்பாடுகளின்; ஒரு முக்கியமான மைல் கல்லாக கலாநிதி சி.ஜெயசங்கர் அவர்களின் தலைமையில்; கற்பிக்கச் செய்வதற்கான செயற்பாடுகள் கலாநிதி சி.ஜெயசங்கர் அவர்களினால் கிழக்குப்பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக அவர் கடமையேற்றுச் செயற்பட்ட காலத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இந்த வகையில் ஒரு அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் எனும் பணி கிடைத்த போது நீண்ட காலமாக மேற்கொள்ளப்பட்ட முயற்சியின் இலக்கினை இவரால் அடைய முடிந்தது. இம்முயற்சியானது பல்வேறு சவால்களை எதிர்கொண்டே மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

அண்ணாவிமார்கள் படிப்பறிவற்றவர்கள், பாமரர்கள் என்று ஆய்வு எழுத்துக்களில் மதிப்பிறக்கஞ் செய்யப்பட்டும், ஆய்வாளர்களுக்கு வேண்டிய தகவல்களை வழங்குவோராகவும், காசுக்கு மத்தளம் அடிப்பவர்களாகவும் பாவிக்கப்பட்டு வந்த சூழலில் அண்ணாவிமார்கள் பல்கலைக்கழகங்களில் பகுதிநேர கலைஞர்களாக கற்பிக்கும் வித்துவம் கொண்ட ஆளுமைகள் என்பதை நடைமுறைக்குக் கொண்டு வந்த கலாநிதி சி.ஜெயசங்கரின் இச்செயற்பாடு மிகவும் கவனத்திற்குரியதாக விளங்குகின்றது.



# இமாலய சாதனை புரிந்த ''தேனகச் செம்மல்'' செ.இராஜதுரை



அத்தியாயம்-06

கலாபூசணம் அரங்கம்
இரா.தவராஜா

*கடந்த இதழ்களில் இராஜதுரையவர்களினால் உருவாக்கப்பட்ட சமுக நலன்புரி நிறுவனங்களையும் சமுகவியலில் இவர் காட்டிய ஈடுபாட்டையும் இவரினால் அவை மட்டுநகருக்கு தந்த மறுமலர்ச்சியையும் தந்திருந்தேன். இனி இவர் அழகியலில் ஆற்றிய பங்களிப்பைப் பற்றி கவனத்தில் எடுக்கின்றேன்.*

**நாடகங்கள்**

01.ஜெயமனோகரா (பள்ளிப் பருவத்தில்) 02. கண்ணகி (பெண் வேடம்) 03. சங்கிலியன். 04. முதல்முழக்கம் 05. சூடு சாம்பலாச்சு போடியாரே (அரசியல் நகைச்சுவை நாடகம்) ஆகிய நாடகங்களை எழுதி முக்கிய பாத்திரங்களில் நடித்தும் சில நாடகங்களை நெறியாள்கையும் செய்திருந்தார். இந்நாடகங்களை மேடையேற்ற இவரும் நாடகக் குழுவினரும் பட்ட சிரமங்களையும் திகிலான சம்பவங்களையும் சுவாரஸ்ய சம்பவங்களையும் பார்போம்.

**கண்ணகி**

அந்தக்காலத்தில் ஜூபிட்டர் பிக்சர்சாரின் தயாரிப்பில் பி.யூ.சின்னப்பா-கண்ணம்பா நடித்து இலட்சக்கணக்கான ரசிகர்களை கவர்ந்து பாராட்டைப் பெற்ற திரைப்படம் கண்ணகி. இத்திரைப்படத்தின் திரைக்கதை வசனத்தை இளங்கோவன் அவர்கள் எழுதியிருந்தார்கள். ஒலிப்பதிவு சாதனங்கள் இல்லாத அக்காலகட்டத்தில் அப்படத்தின் வசனங்களை துல்லியமாக இராஜதுரையவர்கள் மனப்பாடம் செய்து, அவர் காலத்தில் பிரபல்யமாயிருந்த இளைஞர்களான கொக்கோ தம்பிராஜா ஸ்ரீபன் ஆகியோரின் உதவியோடு நாடகம் எழுத்துருவம் பெற்றது. 1944ம் ஆண்டு இந்நாடகம் கோட்டைமுனை லொயிட்ஸ் அவனியூ வீதியிலிருந்த 'வெல்காசிம் ஹோல்' மண்டபத்தில் மேடையேற்றப்பட்டது. இந்நாடகத்தில் திரு. இராஜதுரை கண்ணகி வேடம் ஏற்றே நடித்திருந்தார். அப்போது அவரின் வயது பதினேழாகும். இந்நாடகத்தில் வரும் மாதவி பாத்திரத்தை பின்பு புகழ் பெற்றிருந்த ஒலிபரப்பாளர் மற்றும் செய்தியாளருமான இரா.பத்மநாதன் ஏற்றிருந்தார். மதுரை ஒரிஜினல் போய்ஸ் கம்பெனி எனும் நாடகக்குழுவுடன் வந்து மட்டக்களப்பிலேயே திருமணம் முடித்து வாழ்ந்திருந்த திரு.கோபாலகிருஸ்ணர் என்பவரே இந்நாடகத்தை நெறியாள்கை செய்திருந்தார். இந்நாடகத்தின் வெற்றி அன்றைய இளைஞர்கள் மத்தியில் வரவேற்பை பெற்றதோடு சலசலப்பையும் ஏற்படுத்தியிருந்தது.

**சங்கிலியன்**

யாழ்ப்பாண ராஜ்சியத்தின் கடைசி மன்னனின் கதையை சங்கிலியன் என்னும் பெயரில் மேடை நாடகமாக எழுதினார் இராஜதுரை. இதன் நெறியாள்கையை இரா.பத்மநாதன் ஏற்றிருந்தார். 1957ல் மட்டக்களப்பு நகர மண்டபத்தில் இந்நாடகம் மேடையேறியது. இந்நாடகம் மேடையேற முன்பு நாடகத்துக்கு வேண்டிய சகல பொருட்களும் தளபாடங்களும் இராஜதுரையவர்களின் வீட்டிலிருந்து மேடைக்கு கொண்டு வரப்பட்டிருந்தன. இராஜதுரை சங்கிலியன் பாத்திரத்தை ஏற்றிருந்தார். கடைசிக் காட்சியில் சங்கிலியனை வெள்ளையன் சுட்டுப்படுகொலை செய்வது போன்ற காட்சி. வெள்ளைக்காரராக வேடமனிந்தவரின் கைக்கு துப்பாக்கி போய்ச் சேரமுன் தற்செயலாக பத்மநாதன் அவர்கள் துப்பாக்கியை வாங்கி சர்வசாதாரணமாக உடைத்துப் பார்க்க துப்பாக்கியுள் உயிரைப் பறிக்கும் உண்மையான தோட்டா மாட்டப்பட்டிருந்தது. வீட்டிலிருந்து கொண்டு வரப்படும் வேளை தோட்டா இல்லாதபோது, அப்போது எப்படி வந்தது. இன்றுவரை இந்தக் கைங்காரியத்தை செய்தவர் யார் என்பது புதிராகவேயிருக்கிறது. அன்று மட்டும் இரா.பத்மநாதனவர்கள் அதைப் பாத்திராவிட்டால் அன்று ஒரு பிரளயமே மண்டபத்தில் நடந்திருக்கும். இந்நாடகத்தின் மூலம் இன்னும் ஒரு சுவையான சம்பவம்.

சங்கிலியனை சங்கிலியால் கட்டிப் போட்டிருக்கும் கடைசிக் காட்சியில் மன்னன் வீரவசனம் பேசுவது போல காட்சி அமைக்கப்பட்டிருந்தது. அதற்கு சங்கிலி தேவைப்பட அதைத் தேடிக் கொண்டுவரும் பொறுப்பு நாடகக் குழுவில் ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்டது. அவரும் சங்கிலி தேடாத இடமேயில்லை. கடைசியில் புகையிரதவீதியில் குடிசையமைத்து வாழ்ந்து இரட்டைமாட்டு வண்டியில் பாரிய மரங்களை சங்கிலியில் பிணைத்து எடுத்துச் செல்லும் 'கரத்தைக்கார செபஸ்தி' என்பவரிடம் சென்று தங்கள் சங்கிலிக் கோரிக்கை வைத்தனர். அவரும் விசாரித்து விட்டு. அந்தா மரத்தில் ஆணியடித்து தொங்க விட்டிருக்கும் பழைய சங்கிலிகள் இருக்கு எடுத்துத்து போறமாதிரி கொண்டு வந்து தரவேணும். என்று சொல்ல வந்தவர்களும் அவைகளைப் பெற்றுக் கொண்டு சென்றனர். நாடகத்தின் உச்சக்கட்டம் சங்கிலியனான இராஜதுரையை சங்கிலியால் பிணைத்து இருவர் பிடித்திருக்க வீரவசனம் பேசி முன்னேற சங்கிலி எதிர்பாராமல் அறுந்து விட்டது. அக்காட்சியை எப்படியோ ஒருவாறு சமாளித்து நடித்து முடித்து விட்டனர். இருந்தும் சங்கிலியை ஒப்படைக்க வேண்டுமே என்பதால். செபஸ்தியாருக்கு புதுச்சங்கிலி வாங்கிக் கொடுப்பதென்று முடிவாகி அவரிடம் பழைய சங்கிலி ஒப்படைக்கப்பட்டு காட்சி பற்றியும் தெரியப்படுத்தி இராஜதுரை இழுக்கும் போது அறுந்த விபரத்தையும் கூறி, புதுச்சங்கிலி வாங்கித் தருவதாகச் சொன்னார்கள். அதற்கு செபஸ்தியார் அடேய் தம்பிமாரே அந்தச் சங்கிலி அறுந்து அதைச் சின்னக்கறுப்பு நாடாவினால் சின்னக் கட்டுப்போட்டு வைத்திருந்தனான். அந்த இடத்தாலதான் அறுந்திருக்கு, இராஜதுரை சங்கிலியை அறுக்க அவன் என்ன சாண்டோவா எடுத்த இடத்தில சங்கிலிய கொளிவித்து போங்கடா என்று கூற வந்தவர்களும் அவருக்கு நன்றியை தெரிவித்து விட்டுச் சென்றனர்.

**முதல்முழக்கம்**

08.10.1957ல் மட்டக்களப்பு மத்திய கல்லூரி கட்டட நிதிக்காக மத்திய கல்லூரி நாடகக் குழு வினரால் மட்டக்களப்பு நகர மண்டபத்தில் மேடையேற்றப்பட்டதுதான் முதல்முழக்கம் என்னும் நாடகம். திருவாளர் ம.எ.அ. சுப்பிரமணியம் அவர்களினதும் அவர்களின் பாரியாரினதும் தலைமையில் இந்நாடகம் மேடையேற்றப்பட்டது. இந்நாடகத்துக்கு அன்று பிரசுரிக்கப்பட்ட துண்டுப் பிரசுரத்தை இங்கு தருகிறேன். அக்காலத்தில் இராஜதுரையின் எழுத்தின் உயர்வை இதன் மூலம் அறிந்து கொள்ள ஒரு வாய்ப்பாக இதுவும் அமையலாம்.


முதல் முழக்கம்
8-10-57,

தொடர்ச்சி...

# மென்டலின் பரிசோதனைகளின் விஞ்ஞான அடிப்படை
## மென்டலின் தலைமுறையுரிமை (Mendelian Heredity/Mendelism)

இதரநுக நிலையில் மற்றையதன் வெளிப்பாட்டை மறைப்பதன் மூலம் அங்கியின் தோற்றவமைப்பைத் தீர்மானிக்கும் எதிருரு ஆட்சியான எதிருரு (dominant allele) எனப்படும் ஆட்சியுடைய எதிருருவினால் தோற்றுவிக்கப்படும் பண்பு ஆட்சியான இயல்பு எனப்படும். இதரநுக நிலையில் அங்கியின் தோற்றவமைப்பில் அவதானிக்கக்கூடிய எவ்வகையான தன்மைகளையும் வெளிக்காட்டாத எதிருரு பின்னிடைவான எதிருரு என அழைக்கப்படும் (recessive allele). பின்னிடைவான எதிருருவின் மேல் மறைக்கப்பட்டுக் காணப்படும் இயல்பு பின்னிடைவான இயல்பு என அழைக்கப்படும். எனினும் சமநுக நிலையில் அவை தமது இயல்பை வெளிப்படுத்துகின்றன. நீளமான தண்டின் நீளம் எதிர் குறுகிய தண்டின் நீளம், அல்லது ஊதா பூவின் நிறம் எதிர் வெள்ளைப் பூவின் நிறம் போன்ற எதிரெதிரான தெளிவாக இரண்டு தோற்றவமைப்பு கோலங்களில் காணப்பட்ட இயல்புகளை மாத்திரம் Mendel பின்தொடர்ந்து சென்று அவதானித்தார். அவை நேர்மாறான இயல்புகள் (contrasting traits) எனக் குறிப்பிடப்படுகின்றன.

Mendel தனது பரிசோதனைகளுக்குத் தூயவழி விருத்திக்குரிய (pure breeding) (சில வேளைகளில் மெய்வழி வந்த என அழைக்கப்படும்) பேதங்களை மாத்திரம் பயன்படுத்தினார் தூயவழி விருத்தித் தாவரங்கள் எனப்படுபவை பல சந்ததிகளாக தன்மகரந்தச்சேர்க்கை மூலம் பெறப்பட்ட பெற்றார் தாவரத்தின் அதே பேதத்தை மாத்திரம் உற்பத்திசெய்யும் தாவரங்களாகும். பல சந்ததிகளாக தன்மகரந்தச்சேர்க்கை மூலமாக தூயவழிப் பேதங்களில் இருந்து உற்பத்திபண்ணப்பட்ட ஒரேசீரான வழிகள் தூயவழிவந்தவை (pure lines) என அழைக்கப்படும்.

தனது பரிசோதனைகளின்போது Mendel நேர்மாறான இயல்புகளைக் (contrasting traits) காண்பிக்கும் தூயவழிவந்த தோட்டப் பட்டாணித் தாவரங்களை இனங்கலந்தார். உதாரணமாக தூயவழி ஊதாப்பூ தாவரங்கள் தூயவழி வெள்ளைப் பூ தாவரங்களுடன் கலப்புச்செய்யப்பட்டன. நேர்மாறான இயல்புகளைக் கொண்ட தூயவழிவந்த இரண்டு தாவரங்களை இனங்கலத்தல் கலப்புப்பிறப்பாக்கல் (hybridization) என அழைக்கப்படுகின்றது. பெற்றோருக்குரிய பரம்பரை P பரம்பரை எனக் குறிப்பிடப்படும். இந்தக் கலப்புப்பிறப்பாக்கல் நிகழ்வுகளின் விளைவாகப் பெற்றுக்கொள்ளப்படும் மகட் சந்ததி F1 சந்ததி (முதலாவது மகட்சந்ததp/First Felial generation) எனக் குறிப்பிடப்படும். F1 சந்ததித் தாவரங்களை தன்மகரந்தச்சேர்க்கைக்கு உட்படுத்திப் பெற்றுக்கொள்ளப்படும் மகட்சந்ததி F2 சந்ததி (இரண்டாவது மகட் சந்ததி/Second Felial generation) எனப்படும். ஒரு தனித்துவமான பரம்பரையலகின் வெவ்வேறு எதிருருக்களுக்கான சமநுகத்துக்குரிய நிலைமையைக் கொண்ட பெற்றோர்களிடையே நடைபெறும் இனக் கலப்பின் விளைவாக, கவனத்திற்கொள்ளப்படும் ஒரு தனியான பரம்பரையலகு சார்பாகத் தோன்றும் ஓர் இதரநுகமுள்ள அங்கி ஒரு ஒருகலப்புப்பிறப்பு (monohybrid) எனக் குறிப்பிடப்படுகின்றது. ஒரு தனித்துவமான இயல்புக்கு இதரநுகத்தக்குரிய நிலைமையைக் கொண்ட இரு அங்கிகளுக்கிடையே நிகழ்த்தப்படும் விருத்திப் பரிசோதனை "ஒருகலப்புப் பிறப்பு இனங்கலப்பு" (monohybrid cross) எனக் குறிப்பிடப்படுகிறது. இரண்டு தனித்துவமான பரம்பரையலகுகளின் வெவ்வேறு எதிருருக்களுக்கான சமநுகமுள்ள நிலைமைகளைக் கொண்ட பெற்றோர்களுக்கிடையே நடைபெற்ற ஒரு இனக்கலப்பின் விளைவாகத் தோன்றும் ஆர்வத்திற்கொள்ளும் இரு இயல்புகள் சார்பான ஒரு இதரநுகத்தைக் கொண்ட அங்கி "துவிக்கலப்புப் பிறப்பு" (dihybrid cross) எனக் குறிப்பிடப்படும்.

ஒரு தனித்துவமான ஆட்சியுடைய இயல்புக்கு அறியப்படாத பிறப்புரிமையமைப்பையுடைய அங்கியொன்றை, அதே இயல்புக்கு சமநுகமுடைய பின்னிடைவான நிலைமையக் கொண்ட அங்கியொன்றுடன் இனங்கலத்தல் ஒரு சோதனைக்கலப்பு (test cross) என அழைக்கப்படும். ஒரு அங்கியில் தனித்துவமான ஆட்சியான இயல்புக்கான அறியப்படாத பிறப்புரிமையமைப்பை வெளிப்படுத்துவதற்கு இது பொதுவாக மேற்கொள்ளப்படுகின்றது.



# பட்டறிவு

## யார்இந்த “அப்புஹாமி”

அப்புஹாமி என்கிற பதவிப்பெயர் கண்டி இராஜ்ஜியத்தில் தான் உருவானது. அன்றைய கண்டி அரசரின் தனிப்பட்ட செயலாளரைப் போல அவரின் நேரடிக் கடமைகளை மேற்கொண்டவர்களை “துக்கன்னாறால” என்பார்கள். இன்று அந்தப் பதம்; அரசியலமைப்பில் “குறைகேள் அதிகாரி”க்கு (Ombudsman) பயன்படுத்தப்படுகிறது. கண்டி அரசாட்சியில் இவரை “அப்புஹாமி” என்றே அழைத்தார்கள். கண்டி இராஜ்ஜியத்தில் அன்று இருந்த உயர்குல நிலப்புரபுத்துவ பின்னணியை உடையவர்களே இந்தப் பதவியை வகித்தார்கள். அவர்கள்தான் சாதாரண சிவில் மக்களால் “மாத்தையா” என்றும், “நிலமே” என்றும் கூட அழைக்கப்பட்டார்கள்.

அரசனின் அதி நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒருவரையே இந்தப் பதவியில் வைத்திருப்பார். அரசரின் புதையல்களையும் விலைமதிப்பு மிக்க ஆபரணங்களையும் வைத்திருக்கும் களஞ்சியம் இவரது பொறுப்பிலேயே இருந்தன. அதுமட்டுமன்றி குறிப்பாக அரச மாளிகையின் பாதுகாப்பு, காவலரண்கள் என்கிற முக்கிய மூன்று பணிகளும் இவரது பொறுப்பில் இருந்தன.

அரசரின் தனிப்பட்ட செயலாளருக்கு மாத்திரமல்ல மேலும் பல முக்கிய பாதுகாப்பு விடயங்கோடு சம்பந்தப்பட்டவர்களும், மன்னரின் நேரடி பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டவர்களும் அப்புஹாமி என்றே அழைக்கப்பட்டார்கள். ராஜாதி ராஜசிங்கனின் ஆட்சியின் போது 42 பேர் அப்புஹாமி பதவிகளில் ஏக காலத்தில் இருந்திருக்கிறார்கள். கீர்த்திஸ்ரீ ராஜசிங்கனின் காலத்தில் 160 பேர் இருந்திருக்கிறார்கள். ஸ்ரீ விஜய ராஜசிங்கனின் ஆட்சியில் 170 பெரும் முதலாம் இராஜசிங்கனின் காலத்தில் 81 பேரும், இறுதி அரசனான ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கனின் ஆட்சியின் போது 48 பேரும் இருந்திருக்கிறார்கள்.

மன்னர் தங்கியிருந்த அரண்மனை, அரச கடமைகளை மேற்கொள்ளும் கட்டிடம் என்பவற்றின் காவல் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்ட விசேட படையைச் சேர்ந்தவர்கள், காவல் கடமைகளில் இருக்கும் சாதாரண படை சிப்பாய்கள் இவர்களின் கட்டளையின் கீழ் இயங்கியிருக்கிறார்கள். மன்னருக்கு இடையூறு ஏற்படுத்தக்கூடிய சத்தங்கள் வராமல் பார்த்துக்கொள்வது, மன்னர் கூப்பிட்டவுடன் ஓடிவந்து கட்டளையை ஏற்றுக்கொண்டு செய்துமுடிப்பதும் “துக்கன்னாறால” என்கிற இந்த அப்புஹாமிமாரின் கடமை. இவர்கள் சிப்பாய்களின் உடையில் இருப்பதில்லை. பிரபுக்களைப் போன்ற எடுப்புடன் தான் ஆடைகளை அணிந்திருப்பார்.

இவர்களுக்கு தலைமை வகிக்கும் ஒருவராக முகாந்திரம் என்கிற ஒருவர் இருப்பார். நாளாந்த விடயங்களை தெரிவிப்பதற்கு ஒரு செயலாளர் இருப்பார்.

கிட்டத்தட்ட அரசனுக்காக தன்னை அர்ப்பணிக்கத் துணிந்தவர்களாக இவர்கள் இருந்திருக்கிறார்கள்.

மன்னர் இரண்டாம் இராஜசிங்கனை கொல்ல, நில்லம்பே நுவர என்கிற இடத்தில் வைத்து அம்பன்வல றால என்பவரால் ஒரு கொலைச்சதி முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அவர் தங்கியிருந்த மாளிகைக்குள் இரகசியமாகப் புகுந்து படுக்கையில் வைத்தே கொலைசெய்வது என்பது திட்டம். படுக்கையில் மன்னருக்குப் பதிலாக படுக்கையில் இருந்து அலுவிஹாரே வணிகசேகர முதியான்சே பரம்பரையச் சேர்ந்த ஒரு “துக்கன்னாறால” உயிரைக் கொடுத்து மன்னரைக் காப்பாற்றிய கதையுண்டு. மன்னர் அந்த இடைவெளியில் ஹன்குரங்கெத்த என்கிற இடத்துக்கு தப்பிச் சென்றுவிட்டார்.

48 “துக்கன்னாறால”மாரை பாதுகாப்புக்கு வைத்திருந்த ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன் ஒரு சிங்களவரைக் கூட அந்தக் கடமையில் வைத்திருக்கவில்லை. தமிழ் - வடுக இனத்தவரைத் தான் தனது பாதுகாப்புக்கு வைத்திருந்தார். சிங்களவர்களின் பாதுகாப்பில் அவருக்கு தனிப்பட நம்பிக்கை இருக்கவில்லை. அதை மெய்ப்பிக்கும் வகையில் பிலிமத்தலாவவின் தலைமையில் பெரும் சதிக்கு அவர் முகம்கொடுத்தார். அந்த சதி முறியடிக்கப்பட்டதும் கூட அப்புஹாமிமார்களால் தான். அந்த சதி முதலில் முறியடிக்கப்பட்டதுடன் பிலிமத்தலாவையை தண்டிக்கவில்லை. இரண்டாந்தடவை பிலிமத்தலாவ மீண்டும் அதே சதி முயற்சி மேற்கொண்டபோது அவருக்கு மன்னர் மரண தண்டனை அளித்தார். மீண்டும் ஸ்ரீ விக்கிரமராஜசிங்கனை கொலை செய்வதற்காக கூலிக்கு அமர்த்தப்பட்ட பலவத்தனறால, ஜா முகாந்திரம் ஆகிய இருவரையும் சூட்சுமமாக பிடித்தவர்களும் “துக்கன்னாறால”மார் தான். ஆக இவர்கள் தான் துணிச்சலான நம்பகமான மெய்ப்பாதுகாவலர்களாகவும் அரசனுக்கு இருந்திருக்கிறார்கள்.



நாளாந்த காவலுக்காக நான்கு வேளை நேரங்களாக பிரிக்கப்பட்டிருக்கும். தினசரி காண்டாரத்தை ஒலிக்கச் செய்வதும் இவர்களின் கடமை அந்த காண்டாரம் நான்கு மைல் சுற்றுவட்டத்துக்கு கேட்டிருக்கிறது என்கிறார்கள். இந்த காண்டாரா ஓசையைக் கொண்டு நேரத்தை அறிந்துகொண்டு கடமையாற்றும் வழக்கத்தை பலர் கொண்டிருந்தார்கள். மன்னர் வெளியில் செல்வது அரிது. அவ்வப்போது அரசர் மல்வத்து - அஸ்கிரி தலைமை பிக்குமாரை சந்திக்கச் செல்லும் வேளைகளில் இந்த “துக்கன்னாறால” மாரும் மெய்ப்பாதுகாப்பாளர்களாக அரசனைச் சூழச் செல்வார்கள்.

ஆயுதக் களஞ்சியத்தைப் பாதுகாப்பதும் இவர்களின் கடமை. மன்னரின் ஆயுதங்கள் மற்றவற்றில் இருந்து வித்தியாசமானவை. அவற்றை தூசுபடியாமல், துருப்பிடிக்காமல் பாதுகாப்பதும், ராஜதந்திர கடமைகளுக்கு செல்லும் வேளைகளில் அரசருக்கு அவற்றை உரிய முறையில் சேர்ப்பதும் அவர்களின் கடமை.

இந்த “துக்கன்னறால”மார் வேறு அதிகாரிகளுக்கோ மந்திரிகளுக்கோ கட்டுப்பட்டவர்கள் இல்லை. நேரடியாக மன்னரின் ஆணைக்கு கட்டுப்பட்டவர்கள். அரச உற்சவங்களின் போது அரசி, மந்திரிமார், அதிகாரம்மார் ஆகியோரையும் குறுக்கிட்டு முன்னே செல்ல இவர்களால் முடியும். பல சந்தர்ப்பங்களில் தமது சொத்துக்களுக்கான வரிவிலக்கையும் உடையவர்களாக இருந்திருக்கிறார்கள். மன்னரின் பாத்திரத்துக்கு உள்ளான அப்புஹாமிமார் பல சலுகைகளையும் உதவிகளையும் பெற்றிருப்பதை பல்வேறு பதிவுகள் மெய்ப்பித்திருக்கின்றன. இரண்டாம் இராஜசிங்கன் ஒரு “துக்கன்னாறால”வுக்கு ஒரு கிராமத்தை எழுதிக் கொடுத்திருக்கிறார். கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் ஒரு விசுவாசமான “துக்கன்னாறால”வுக்கு அவர் உயிருடன் இருக்கும்வரை நெல், தானியங்களை இலவசமாக கொடுக்க உத்தரவிட்டிருக்கிறார்.

கண்டி இராஜ்ஜியத்தில் இந்த “துக்கன்னாறால”மாருக்கு இன்னொரு

**என்.சரவணன்**

பெயராகவே அப்புஹாமி புழக்கத்தில் இருந்திருக்கிறது. ஆனால் பிற்காலத்தில் கரையோரச் சிங்களவர்கள் மத்தியில் இருந்த உயர்சாதி கொவிகம நிலப்பிரபுத்துவ சமூகத்தைச் சேர்ந்த ஆண்களை அப்புஹாமி என்கிற கௌரவப் பெயரை காலப்போக்கில் சுவீகரித்துக்கொண்டார்கள். இந்தப் பெயரின் சிறப்பைப் பற்றி இன்னும் கூறுவதென்றால் மன்னர் முதலாம் விமலதர்மசூரியன் கத்தோலிக்க மதத்தைத் தழுவி தனது பெயரை “தொன் யுவான் அப்புஹாமி” என்றுதான் தனக்கு பெயரை சூட்டிக்கொண்டார். எனவே இது ஒரு உயர்சாதிக்குரிய, உயர் குழாமினருக்கு உரிய மேட்டுக்குடி கௌரவப் பெயராக காலப்போக்கில் இருப்புகொண்டது.

சிங்களவர்கள் மத்தியில் “அப்புஹாமி, ராலஹாமி, மாத்தையா, முதலாளி, பாசுன்னே” போன்றவை உயர்சாதி/மேட்டுக்குடி ஆண்களுக்கும் “ஹாமினே” என்று உயர்சாதி/மேட்டுக்குடி பெண்ணுக்கும் பயன்படுத்துவது நெடுங்கால பாரம்பரியமாக இருந்துவருகிறது. இன்று அது சாதி, குலம் என்பவற்றைத் தாண்டி வர்க்க உயர்நிலையினருக்கும், அதிகார வர்க்கத்தினருக்கும் பயன்படுத்தப்பட்டுவருவதைக் காணலாம். ராலஹாமி என்பது அதிகமாக பொலிஸ் உத்தியோகத்தர்களை விளிக்க இன்றும் அதிகமாக பயன்படுத்தப்பட்டுவருகிறது.

---

தொடர்ச்சி...

## சொல்லத் துணிந்தேன்!

அப்படி ஆக்கும்போது கல்முனைவடக்குப் பிரதேசத்தில் எஞ்சிய 36 (44 – 08 = 36) நிலத்தொடர்போடு கூடிய கிராமசேவகர் பிரிவுகளையும் உள்ளடக்கிய பிரதேசத்தின் குடிப்பரம்பல் பின்வருமாறு அமைகிறது.

| | | |
|---|---|---|
| தமிழர் | : | 31,999 |
| முஸ்லிம் | : | 13,895 (31,338 – 17,433 = 13,895) |
| சிங்களவர் | : | 168 |
| ஏனையவர்கள் | : | 1,083 |
| மொத்தம் | | 46,345 (63,788 – 17,443 = 46,345) |

இது நிலத்தொடர்புடையதாக இருப்பதனாலும் தமிழர்களைப் பெரும்பான்மையாகக் கொண்டதாகவும் தமிழ், முஸ்லிம், சிங்களவர் என (ஏனையவர்களுள் பறங்கியர் அடங்குவர்) மூவின மக்களைக் கொண்டதாகவும் இருப்பதனாலும் இதனையும் தனியானதொரு பிரதேச செயலகப் பிரிவாக (இல.2) உருவாக்க முடியும். இது தமிழர்களுக்குத் திருப்தியான தீர்வாகும்.

அப்படி ஆக்கும்போது கல்முனை முஸ்லிம் பிரிவில் எஞ்சியிருக்கின்ற 14 கிராமசேவகர்பிரிவுகளையும் அதாவது கல்முனைக்குடியை இன்னுமொரு தனியான பிரதேச செயலகப் பிரிவாக (இல.3) உருவாக்க முடியும். அப்படி உருவாக்கும்போது இந்த உத்தேச மூன்றாது பிரிவின் மொத்த சனத்தொகை (100% முஸ்லிம்) 23,830 ஆகும்.

இதுவே தற்போது கல்முனை வடக்குப் பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்துவதிலுள்ள (நிலத்தொடர்பற்ற பிரச்சினை உட்பட) பிரச்சினைகளைத் தீர்த்துப் புதிய பிரதேசசெயலகங்களை உருவாக்குவதற்கான நடைமுறைச் சாத்தியமான தீர்வாகும். மேற்கூறப்பட்ட இல:1(உத்தேச மருதமுனை பிரதேச செயலகப் பிரிவு), இல:2 (உத்தேச கல்முனை வடக்குப் பிரதேச செயலகப் பிரிவு), இல: 3 (உத்தேச கல்முனை தெற்குப் பிரதேச செயலகப் பிரிவு என மூன்று பிரதேச செயலகப் பிரிவுகளை உருவாக்குவது நடைமுறைச் சாத்தியமானது.

அப்படி உருவாக்கும் போது முஸ்லிம்களுக்கென்று 100% முஸ்லிம்களைக் கொண்ட இரு பிரதேச செயலகப் பிரிவுகளும் (இல:1, இல. 3) தமிழர்களுக்கென்று தமிழ், முஸ்லிம், சிங்களவர்களைக் கொண்ட தனியான தமிழ்ப் பெரும்பான்மைப் பிரதேச செயலகப் பிரிவொன்றும் (இல: 2) அமைய வாய்ப்புள்ளது.

# ஒரு வுஃபே வரிசையில்..... மட்டக்களப்பின் விருந்துணவுகள் என்ன?

புரியாணி, நூடில்ஸ், வெள்ளைச்சோறு, சிவப்புச்சோறு, ஃபிரைட் சிக்கன், சிக்கன் டெவல், மட்டன் குர்மா, என்று வரிசையாக அடுக்கப்பட்டிருந்த கலியாண வீட்டு வுஃபே வரிசையில் நகர்ந்துகொண்டிருந்தோம். சாப்பாட்டு மணம் மூக்கைத் துளைக்க, வுஃபே பரிமாறிக்கொண்டிருந்த பணியாளர் இறுகிய முகத்துடன் ஒவ்வொரு இறைச்சித்துண்டாக எடுத்து தட்டில் வைத்துக்கொண்டிருந்தார். கொஞ்ச நேரத்துக்கு முன்பு தான் ஒருவர் இரண்டு சிக்கன் துண்டுகளை எடுக்கப்போய் அதை இவர் தட்டிவிட்டிருக்கிறார். அவர் காச்மூச்சென்று கத்தி பெரிய ரகளை பண்ணியிருந்தார். மனிதன் மாப்பிள்ளை வீடு வேறாம். இவர் முகத்தைத் தான் பார்க்க பரிதாபமாக இருந்தது.

'ஆனா இந்த வுபேயில என்னவோ ஒண்டு குறைஞ்சமாதிரி இல்லயா மச்சான்' என்று கேட்டபடியே எனக்கு பின்னே, வரிசையில் வந்துகொண்டிருந்தான் நண்பன். 'உபசரிப்பு அதோட மண் வாசம் வீசுற சாப்பாடுகள்ற சுவை' என்றேன் நான். இன்றும் கிராமப்புறங்களில் திருமண வீடுகளின் மதிய உணவு நேரம் போல இனிமையான பொழுது வேறெதுவும் இல்லை. உச்சஸ்தாயியில் 'றவுடி பேபி' என்று கதறும் வானொலிப்பெட்டி. வியர்வையும் வாசனைத்திரவியங்களும் பன்னீரோடு சேர்ந்து மணம் பரப்ப இடைவிடாமல் வந்து அமர்ந்து கொண்டிருக்கும் சுற்றங்கள். 'கை கழுவத்தண்ணி', 'ரெண்டு மரக்கறி பிளேற்', 'தம்பி தம்பி இஞ்சால சேவியற்', 'இன்னா இவக்கொரு அயிஸ்கிறீம் குடுங்க', 'அந்த மூலைல இன்னும் சோறு போகல்ல' என்று சபையை நிறைத்து நின்று கட்டளையிட்டுக்கொண்டிருக்கும் மூத்த தலைமுறையினர். அவர்களுக்கூடே வியர்த்து விறுவிறுக்க கைகளில் சோற்றுக்கோப்பை, தண்ணீர் வாளி, குழம்புச்சட்டி என்று அள்ளிக்கொண்டு அங்குமிங்கும் ஓடித்திரியும் இளவட்டங்கள். அந்தக் காட்சியும், ஒருவரை விடாமல் எல்லோரையும் விழுந்து விழுந்து உபசரிக்கும் அழகும், இன்றும் கிராமப்புறங்களில் மாறவில்லை.

ஆனால் நகர்ப்புறங்களின் வுஃபே போலவே, அங்கும் உணவின் உருசி மாறிவிட்டது. இன்று புரியாணியும் இறைச்சியும் இல்லாத கல்யாண வீடு கிராமங்களில் கூட இல்லை. எங்குமே இன்று பாயாசத்தையும் காண முடிவதில்லை. இன்றைய குழந்தைகள் கலியாண வீடென்றால் தேடித்தேடி ஐஸ்கிறீம் குடிப்பது போல, இன்னொரு கிளாஸ் இன்னொரு கிளாஸ் என்று கேட்டுக்கேட்டு பாயாசம் வாங்கிக்குடித்த திருமண வீடொன்று இப்போதும் நினைவில் இருக்கிறது.

சரி, கலியாண வீட்டை விடுவோம். நமது அன்றாட உணவுப்பழக்க வழக்கம் எத்தனை மாறிவிட்டது? நம் மத்தியில் பத்து இருபது வருடங்களுக்கு முன்பு கூட கொத்து இருந்தது தான். புரியாணி இருந்தது தான். வீச்சுரொட்டி இருந்தது தான். (இப்போது வீச்சுரொட்டியும் புனித நவநாகரீக மதத்தைத் தழுவி பரோட்டா என்று பெயர் மாற்றம் செய்துகொண்டு விட்டது). ஆனால், ஆடிக்கொருக்கா ஆவணிக்கொருக்கா என்று தான் அந்த உணவுகள். இன்று அவற்றை சர்வசாதாரணமாக அன்றாட உணவுகளாக்கி விட்டோம். இந்திய சைவ உணவகங்களின் உபயத்தில் தோசை, இட்லி, உப்புமா இவையாவது எஞ்சியிருக்கிறது. ஆனால், நம் மண் வாசம் வீசும் உணவுகள்? அவற்றை எத்தனை அரிதாக உண்கிறோம்? பத்து ஆண்டுகளுக்கு முன் நமது அன்றாட உணவாக இருந்த எத்தனை உணவு வகைகளை மறந்தே போய்விட்டோம்?

அதை யோசித்துக்கொண்டிருந்த போது, போன ஆண்டு முகநூலில் இட்ட ஒரு பதிவு நினைவுக்கு வந்தது. 'இலங்கைத்தமிழரின் தேசிய உணவாக எதைச் சொல்லலாம்?' என்று ஒரு முகநூல் நண்பர் பதிவிட்டிருந்தார். அதில் 'மட்டக்களப்பின் பிரதான சுதேச உணவுகள் எவை' என்ற கேள்வியும் கேட்கப்பட்டிருந்தது. (துரதிர்ஷ்டவசமாக அவர் பெயரையும் அந்தப் பதிவையும் தவறவிட்டுவிட்டேன்.)

பல்கலைக்கழகத்தில் படிக்கும் காலத்தில் இங்கு வருகை தந்த, இலங்கையின் ஏனைய பகுதிகளைப் பூர்விகமாகக் கொண்ட நண்பர்களின் கருத்தை வைத்து, 'தனித்துவமானவை' அல்லது 'பாரம்பரியமானவை' என்று கிழக்கிலங்கையின் பாரம்பரியமான அல்லது தனித்துவமான உணவுகளாகச் சொல்லக்கூடியவற்றை, என் அறிவுக்கு எட்டியவரை பட்டியலிட்டு, அங்கு

வி.துலாஞ்சனன்

பதிலளித்தேன்.

அந்தப் பட்டியலில் முதன்மையானது தயிர்க் கரையல். அப்போது கொழும்பில் தங்கியிருந்தேன். கந்தசஷ்டி விரத காலம். விடுமுறை எடுத்து வீடு போகமுடியாத நிலைமை. நான் தங்கியிருந்த வீட்டின் சொந்தக்கார அம்மையாரும் சமயப்பழம் என்பதால், பெருந்தன்மையாகத் தானே விரதச்சோறு சமைத்துத்தருவதாக ஒத்துக்கொண்டிருந்தார். உபவாசம் முடித்த அன்று தயிர்க்கரையலுக்கு ஆயத்தம் செய்யுங்கள் என்று கேட்டிருந்தேன். அவருக்கு அது தெரிந்திருக்கவில்லை. நானே எல்லாம் தயார் செய்து, வாழையிலையில் சோற்றைக் கொட்டி, தயிரும் சீனியும் வாழைப்பழமும் கொஞ்சம் தண்ணீரும் சேர்த்து கரைத்துச் சாப்பிட்டதை பக்கத்திலேயே அமர்ந்து கன்னத்தில் கையை ஊன்றியபடி அதிசயமாகப் பார்த்துக்கொண்டிருந்த அவரை இப்போது நினைத்தாலும் சிரிப்பு வருகிறது.

தயிரை கறி வகைகளில் ஒன்று போல சோற்றோடு பிசைந்து சாப்பிடுவதே இலங்கையின் ஏனைய பகுதிகளில் பிரபலம். கிழக்கில் இப்படி சீனி, வாழைப்பழம் சேர்த்து கரைத்துச் சாப்பிடுவது தான் வழக்கம். இந்தியாவிலும் தமிழகத்தில் கறியுடந்தான் தயிர். ஆனால், பஞ்சாப்காரர்களிடம் சீனியுடன் தயிரை உண்ணும் வழக்கம் உண்டாம்.

கரையல் சோறுக்கு எல்லாத்தயிருமே அருமை தான் என்றாலும், விசேடமாக எருமைத்தயிர் சேர்த்த கரையல் சோறு அற்புதம். தயிர் இல்லாமல், மாம்பழம் அல்லது விளாம்பழம் பிசைந்து கொஞ்சம் தேங்காய்ப்பால் ஊற்றியும் கரைத்துச் சாப்பிடலாம். பெரும்பாலும் சைவ உணவின் பின், உண்ட அதே தட்டில் அல்லது இலையில் இரண்டாம் தடவை சோறு போட்டுத்தான் இப்படி 'கரைத்துச்' சாப்பிடுவார்கள். இதை சாப்பிட்ட பின் கண்கள் சொக்கி வருகின்ற தூக்கம் இருக்கிறதே, சா!
கரைத்துச் சாப்பிடாமல் இன்னொரு விதமாக, கரைத்துக்; குடிக்கலாம். சாப்பிட்டு முடித்ததும், ஒரு கிண்ணத்தில் தயிரும் சீனியும் வாழைப்பழமும் இட்டுப் பிசைந்து



கரண்டியால் சாப்பிடுவது. ஆம், ஐஸ்கிறீம் சாப்பிடுவது போலத்தான். ஆனால் இதன் உருசியே தனி. டம்மோய்! நினைக்கவே நாக்கால தண்ணி ஓடுது!

அடுத்ததாக புக்கை. புக்கை கோவில்களின் புண்ணியத்தில் இன்றும் கிழக்குக்கரையில் எஞ்சியிருக்கும் சுவையான ஆகாரம். புக்கை என்றால் பொங்கல் தான். பொங்கலை 'புக்கை' என்று சொல்வது கிழக்கின் நாட்டார் மரபு. அது 'புற்கை' என்ற பழந்தமிழ்ச்சொல்லின் மருவிய வடிவம். திருக்குறளில் 'தெண்ணீர் அடு புற்கையாயினும்' என்று பயன்பட்ட சொல் அது.

ஆனால் ஏனைய இடங்களில் செய்யப்படும் பொங்கலுக்கும், கிழக்கின் புற்கைக்கும் செய்முறையில் சிறிய வேறுபாடு இருக்கிறது. ஏனைய இடங்களில் பாலோடு தண்ணீர் சேர்த்து தான் பொங்கல் செய்வார்கள். இங்கு தூய பாலில் தான் புற்கை செய்யப்படும். பாலை, குறிப்பாக, எருமைப்பாலை பானையில் ஊற்றி அடுப்பில் வைத்து, அது பொங்கிவழிந்த பின்னர் பதம் பார்த்து, வரிசையாக அரிசி, சர்க்கரை, சீனி, பேரீச்சம்பழம் போட்டுச் செய்யும் பொங்கல் தான் புற்கை. சாப்பிடும் போது வாழைப்பழத்தை சேர்த்துக்கொள்வார்கள். இனிப்பும் சுவையும் தூக்கலாக இருக்கும். புற்கைக்கு அரிசிக்குப் பதில் அந்தக்காலத்தில் சோளங்குறுநெல்லைப் பயன்படுத்தினார்களாம்.

இங்கு இருந்த - இருக்கின்ற மாலைநேரச் சிற்றுண்டிகளில் குறிப்பிடத்தக்கது, கிழங்குப்பொரியல். கிழங்கு என்றால் இலங்கையின் மற்ற இடங்களில் பொதுவாக உருளைக்கிழங்கு தான். ஆனால், கிழக்கில் கிழங்கு என்றாலே மையரிக்கிழங்கு தான் - மரவள்ளிக்கிழங்கு! மரவள்ளிக் கிழங்கை துண்டு துண்டாக வெட்டி கொச்சிக்காய்த்தூளில் (மிளகாய்) புரட்டி எண்ணெயில் பொரித்து சாப்பிடும் கிழங்குப்பொரியல்கள் தனி உருசி கொண்டவை. கொஞ்சம் புளித்தண்ணீர் அல்லது (மிளகாய்த்)தூள் சேர்த்துக்கொள்வார்கள். மற்ற இடங்களில் ரீக்கடை போல இங்கு பொதுவாக இளவட்டங்கள் - முதிர்வட்டங்கள் கூடும் இடங்கள் இந்த கிழங்குப்பொரியல் விற்கும் 'கிழங்குக்கடை'கள் தான். 'சிப்ஸ்'களின் வணிக விளம்பரங்களை அடுத்து, கிழங்குப்பொரியல்களுக்குப் பதில், கிழங்குச்சீவல்கள் வேகமாக புகழ் பெற்று வருகின்றன.

இவற்றைத் தவிர, கிழக்குக்கரையின் உபசரிப்பில் தனித்துவமானது அரிசிமா இடியப்பமும் தேங்காய்ப்பால் சொதியும் என்று பல நண்பர்கள் சொன்னார்கள். தனிப்பட்ட ரீதியில் எனக்கு வேறுபாடு தெரியவில்லை. யாழ்ப்பாணத்தில் சாப்பிட்ட இடியப்பம் ஊர் இடியப்பத்தை விட சுவையாகத் தெரிந்தது எனக்கு.

இன்னும் பலவகையான உணவு வகைகள் இன்று அருகிப்போகின்றன. ஆணம் அதில் குறிப்பிடத்தக்க ஒன்று ஆணம். தேங்காய்ப்பாலில் செய்யப்படும் சொதியின் இன்னொரு வகை தான் ஆணம். இதில் உறைப்புச்சுவை கொஞ்சம் குறைவு என்பதே இதன் தனித்துவம். இன்று முற்றாக மறைந்துவிட்ட இன்னொரு உணவு குரக்கன் கூழும் மீன்கறியும். அந்தக்கால மதிய உணவு என்றார் அம்மம்மா. சுடுசோறும் தேங்காய்ப்பூவும் இன்னொரு சுவையான காலையுணவு. மாங்காயை உடைத்து கொச்சிக்காய்த்தூள், உப்போடு தொட்டுச் சாப்பிடுவது இளவயதில் சுவையான சிற்றுண்டிகளில் ஒன்று.

'போடா லைன் முன்னுக்குப் போய்ற்று' என்று நண்பன் முன்னே உந்தித்தள்ளிய போது தான் சுயநினைவுக்குத் திரும்பினேன். கற்பனையில் அந்த உணவுகளைக் கண்டு நாவூறி நின்ற நான், முன்பே எனக்கென காத்திருப்பது வெறும் வுஃபே மட்டும் தான் என்பதைக் கண்டேன். கோழி, ஆடு, ஜேம் கறி, கேசரி என்பன என்னைப்பார்த்து சிரித்துக் கொண்டிருந்தன. வரிசை நகர்ந்துகொண்டிருந்தது. வுஃபே பணியாளர் அதே இறுகிய முகத்துடன் இறைச்சித்துண்டுகளை எடுத்து ஒவ்வொரு தட்டிலும் இட்டுக்கொண்டிருந்தார். பெருமூச்சு விட்டபடி நான் தட்டைத் தூக்கியபடி நடந்தேன்.

தொடர்ச்சி...

## இஸ்லாமிய மாணவர்கள் ...

கவிஞர் நீலாவணனின்மழைக்கை நாடகத்தில் இன்றையபேராசிரியர் நு ஹ் மா ன் இ ந் தி ர னா க வேடமிட்டுநடித்துள்ளார். காலம்சென்ற எழுத்தாளர் மருதூர்க்கொத்தன் கிருஸ்ணராகவேடமிட்டு நடித்துள்ளார்.

இதைப்போல இன்னும்பலர் பாடசாலைகளில் நடித்திருப்பர் அவர்களைஅன்று யாரும்தடுத்தாகத் தெரியவில்லை

முஸ்லீம் காங்கிரஸ் ஸ்தாபகர்களுள் ஒருவரான முன்னாள்அமைச்சர் சேகுஇஸ்சதீன் பெண் வேடமிட்டுநடித்த கதைசுவராஸ்யமானது அதனைஅடுத்த முறைபார்ப்போம்

(தொடரும்)

தொடர்ச்சி...

## 'வாழும் மனிதம் ' வரலாற்று ...

தலைமுறையினர் அறிய வாய்ப்பில்லை.

இந்த ஆவண தொகுப்பு போல நல்லையா மாஸ்டரின் பாராளுமன்ற உரைகளும் எதிர்காலத்தில் முழுமையான நூலுருப் பெறவேண்டும்.அவ்வாறு வருகின்ற போது எதிர்காலத்தில் அரசியல் தலைவர்களாக வரும் எமது இளம் சந்ததிகளுக்கு அது ஒரு சிறந்த கையேடாக இருக்கும் என்பது நிச்சயம்.

இறுதியாக இந்நூலின் பதிப்பாசிரியராக இருந்து இந்த வரலாற்று கடமையை திறம்பட செய்து முடித்திருக்கும் கவிக்கோ வெல்லவூர் கோபால் அவர்களையும் நல்லையா நினைவுப்பணி மன்றத்தாரையும் மன்றத்தின் ஆயுள்கால காப்பாளர் திருமதி நளினி காசிநாதன் அவர்களையும் பாராட்டாமல் இந்த குறிப்புகளை நிறைவு செய்ய முடியாது. அவர்களுக்கு "என்றும் ஒரு அரசியல்,வரலாற்று மாணவனாக நின்று" நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதில் அகமகிழ்கின்றேன்..

தொடர்ச்சி...

## சிரேஷ்ட ஊடகவியலாளர் எஸ். தில்லைநாதன் காலமானார்

ஆண்டுகளுக்கு மேல் ஊடகத்துறையில் பணியாற்றியவர்.

தமிழ் ஊடகத்துறையில் ஜாம்பவானாகத் திகழ்ந்தவர். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் நீண்டகாலம் பணியாற்றியவர். பாராளுமன்றச் செய்திகளை நேர்த்தியுடன் தொகுத்து ஒலிபரப்பிய தில்லை, இலங்கை வானொலி ரசிகர்களால் நன்கு நேசிக்கப்பட்ட ஓர் ஊடகவியலாளர்.

1944ம் ஆண்டு பிறந்த சிவபாக்கியம் தில்லைநாதன் என்ற இயற் பெயரைக் கொண்ட இவர், வீரகேசரி பத்திரிகையில் இணைந்து தனது ஊடகப் பயணத்தை ஆரம்பித்தார். அதன் பின்னர் தினபதி, சிந்தாமணி பத்திரிகைகளிலும் பணியாற்றினார்.

அச்சு ஊடகத்துறையிலிருந்து விலகிய எஸ். தில்லைநாதன் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் இணைந்து சுமார் 25 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றியுள்ளார். இலங்கையின் முதலாவது தமிழ் எப். எம். வானொலியான :எப்.எம்.-99' வானொலியை ஆரம்பித்து, அதன் பணிப்பாளராக நீண்டகாலம் செயற்பட்டார்.

இதன் மூலமே 'எப். எம்- 99 தில்லை' என நண்பர்களால் அழைக்கப்பட்டார். 'எப். எம். – 99' வானொலியிலிருந்து ஓய்வுபெற்ற இவர், சக்தி தொலைக்காட்சி நிறுவனத்தில் செய்திப் பிரிவில் பணிபுரிந்தார். இதன் பின்னர் லேக்ஹவுஸ் நிறுவனத்தில் இணைந்து தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியராகப் பணியாற்றினார்;

2014 இறுதிப் பகுதியில் ஓய்வுபெற்ற இவர், மரணிக்கும் வரை ஊடகப் பணியிலேயே தன்னை அர்ப்பணித்துச் செயற்பட்டார். இவருடைய சேவையைப் பாராட்டி இலங்கை பத்திரிகைப் பேரவை 'வாழ்நாள் சாதனையாளர்' விருது வழங்கிக் கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது. இலங்கை தணிக்கை சபை, பத்திரிகைப் பேரவை ஆகியவற்றின் மிக நீண்டகால உறுப்பினராகவும் தில்லைநாதன் பணியாற்றினார்.

தொடர்ச்சி...

## மைத்திரியே ஜனாதிபதி வேட்பாளர் என சுதந்திரக் கட்சி முடிவு!

### மகிந்த தரப்பு பதிலில்லை

இருப்பதாகவும் இதனால் மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதி வேட்பாளராக தெரிவு செய்ய வேண்டுமெனவும் உள்ளக அழுத்தங்கள் கட்சிக்குள் அதிகரித்துள்ளன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினர் முன்னாள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, நேற்றைய மத்திய குழுக் கூட்டத்தின் பின்னர் மைத்திரியே ஜனாதிபதி வேட்பாளரென கூறியுள்ளார்.

இதேவேளை, மகிந்த ராஜபக்ச தரப்புடனான பேச்சுக்களில் தன்னை ஜனாதிபதி வேட்பாளராக்குவது என்ற அணுகுமுறை தவறினால், ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாசாவை ஜனாதிபதி வேட்பாளராக தெரிவு செய்து, ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவு வழங்குவதென மைத்திரிபால சிறிசேன தீர்மானித்து வருவதாகவும் கட்சித் தகவல்கள் கூறுகின்றன.

இரண்டு வகையான அணுகுமுறைகளை மைத்திரிபால சிறிசேன கையாளுகின்றாரென கொழும்பு அரசியல் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை, நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தான் போட்டியிடப் போவதில்லையென மைத்திரிபால சிறிசேன தனக்கு நெருக்கமானவர்களிடம் கூறி வருவதாக ஏலவே செய்திகள் வெளியாகியிருந்தன.

அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் எட்டாம் திகதியுடன் மைத்திரியின் பதவிக் காலம் முடிவடைகின்றமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ச்சி...

## இனக்கலவரத்துக்கு அடித்தளமிடும் கல்முனைப் போராட்டங்கள்

தெற்கே நான்கு பிரிவுகளை (குறிச்சிகளை) கொண்டிருந்த கல்முனைக்குடி கிராமமும் கல்முனைப் பட்டினத்துடன் இணைக்கப்பட்டது.

அதேவேளை கல்முனைக்கு மிக அண்மித்ததாக அமைந்த பாண்டிருப்பு, சேனைக்குடியிருப்பு, நற்பிட்டிமுனை போன்ற தமிழர் வாழ் கிராமங்கள் கல்முனை பட்டினசபையின் கீழ் கொண்டுவரப்படவில்லை. கல்முனைப் பட்டினசபையில் தமிழர்களை சிறுபான்மையினராக்கும் திட்டத்தின் அடுத்த அங்கமே இது.

மேலும், கல்முனைப்பட்டின சபைக்குரிய வட்டாரங்கள் (Wards) பிரிக்கப்பட்ட வேளைகளிலும் தமிழர்கள் பாதிக்கப்பட்டார்கள். வட்டாரங்கள் பிரிக்கப்பட்ட போது தமிழர் பிரதிநிதித்துவத்தைக் குறைப்பதற்காக கல்முனை 3ம் குறிச்சியை மாரியன் வீதி எனப்படும் வீதியால் இரண்டாய்ப் பிரித்து வடக்கே உள்ளவர்களை கல்முனை 2ம் குறிச்சியுடன் சேர்த்து 2ம் வட்டாரம் எனவும், தெற்கே உள்ளவர்களை கல்முனைக்குடியின் 3ம் குறிச்சியுடன் சேர்த்து 3ம் வட்டாரம் எனவும் அமைத்தார்கள்.

இதனால் கல்முனை 3ம் குறிச்சித் தமிழர்கள் 2வட்டாரங்களில் பங்குபோடப்பட்டார்கள். கல்முனைப் பட்டினசபையில் தமிழ் உறுப்பினர்களை குறைக்கும் திட்டமே இது. இதனால் கல்முனைப் பட்டினசபையின் 7 வட்டாரங்களுள் 2 வட்டாரங்கள் தமிழ் பெரும்பான்மையாகவும் 5 வட்டாரங்கள் முஸ்லிம் பெரும்பான்மையாகவும் வருமாறு திட்டமிட்டு அமைக்கப்பட்டன.

............................

முதலாவதாக நடந்த கல்முனைப்பட்டின சபைத் தேர்தலின் போது கட்டவிழ்த்து விடப்பட்ட காடைத்தனத்தினால் தரவைப்பிள்ளையார் கோயில் வீதகிகும் செயிலான் வீதிக்கும் இடையில் வாழ்ந்த தமிழ்க் குடும்பங்கள் பாதிக்கப்பட்டு பயத்தினால் இடம்பெயர்ந்தனர்.

கல்முனைப் பட்டினசபையின் முதலாவது நடவடிக்கை தமிழ்க்குறிச்சியான கல்முனை 2ம் குறிச்சியில் அமைந்திருந்த கண்ணகியம்மன் ஆலயத்துக்கு அருகில் கடற்கரையோரம் 2 ஏக்கர் நிலம் முஸ்லிம் மையவாடிக்கு ஒதுக்கப்பட்டது. முஸ்லிம் கிராமமான கல்முனைக்குடியில் கடற்கரையோரம் நிலம் இருக்கும்போதுதான் இது தமிழர்களுக்கு எதிராக வேண்டுமென்று செய்யப்பட்டது மட்டுமல்லாமல் கல்முனைக்குடியில் முஸ்லிம்களுக்கு என்றிருந்த சந்தையில் 1950இல் மூடிவிட்டு முஸ்லிம் உறுப்பினர்களை பெரும்பான்மையாகக் கொண்ட கல்முனைப்பட்டின சபையின் அனுசரணையுடன் தமிழர்களின் கல்முனைச் சந்தையில் முஸ்லிம்கள் ஊடுருவி அங்கிருந்த தமிழ், சிங்கள வர்த்தகர்களை இடம்பெயரச் செய்தார்கள்.

............................1967ம் ஆண்டு கல்முனை 1ம் குறிச்சியைச் சேர்ந்த கடற்கரைப்பகுதியில் அரசகாணிகளில் சுமார் 300 முஸ்லிம் குடும்பங்கள் அத்துமீறிக் குடியேற்றப்பட்டு இப்பகுதிக்கு காரியப்பர் புரம் என்றும் பெயரிடப்பட்டது. தமிழர்கள் இதனை எதிர்த்தார்கள் அதனால் ஏற்பட்ட கலவரத்தின் போது கல்முனையின் தென் எல்லையான கல்முனை 3ம் குறிச்சியைச் சேர்ந்த தமிழர்கள் தாக்கப்பட்டும், பொருட்கள் நாசமாக்கப்பட்டும், வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டும் அவர்கள் மீது வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டதால் அம்மக்கள் அகதிகளாகி அண்மைய தமிழ் கிராமங்களில் தஞ்சமடைந்தனர். கலவரமடங்கிய பின் தங்கள் வாழ்விடங்களுக்குத் திரும்பிய தமிழர்கள் பலர் பயத்தின் காரணமாக குறைந்த விலைக்கு முஸ்லிம்களுக்கு தங்கள் வீடு, வளவுகளை விற்றுவிட்டு வேறு இடங்களுக்குச் செல்லலாயினர்.' (தம்பியப்பா கோபாலகிருஸ்ணன், வீரகேசரி.04.01.2014) இவ்வாறு கல்முனையை முஸ்லிம்மயப்படுத்திய வரலாறு இருக்கத்தக்கதாக கல்முனை முஸ்லிம்களின் பாரம்பரிய வர்த்தக நகர் என்பதும் நிர்வாக முறையினைப் பெற்று அதன்மூலம் கொடுக்கும் அழுத்தத்தினால் முஸ்லிம்களை வெளியேற்றுகின்ற திட்டமே தமிழர்களுடையது என்பதும் அதைப் பாதுகாப்பது ஒவ்வொரு முஸ்லிம்களின் கடமை என இளைஞர்களை உசுப்பேற்றிப் பேசுவதும் நியாயமற்றவகையில் தமிழர்களுக்கு எதிராக போராட்டங்களை நடாத்துவதும் இன நல்லிணக்கத்துக்கு நல்லதல்ல என்பதை முஸ்லிம் மக்கள் உணர்ந்து கொள்தல் வேண்டும்.

கிழக்குத் தமிழர்கள் ஒரு வர்த்தக சமூகம் அல்ல விவசாய சமூகம்தான். அவர்களால் முஸ்லிம்களுக்கு அழுத்தங்களைக் கொடுத்து அவர்களைத் துரத்தியடித்து அந்த இடங்களில் தங்களின் வர்த்தகத்தை ஸ்தாபிக்கமுனைய மாட்டார்கள். அவ்வாறு முனைபவர்களாக இருந்தால் அதனை மட்டக்களப்பில் மிக இலகுவாகச் செய்யமுடியும். ஏனெனில் மட்டக்களப்பு நகரில் உள்ள பெரும்பாலான வர்த்தக நிலையங்கள் காத்தான்குடியில் உள்ளவர்களுடையதாகும். இன்றும் கடைகளைக் கட்டி முஸ்லிம்களுக்கு வாடகைக்குக் கொடுப்பவர்களாகவே தமிழர்கள் உள்ளார்கள் நிலைமை இவ்வாறு இருக்கும்போது தமிழர்கள் கல்முனையை கைப்பற்றப் போவதாக கதையளப்பது எந்தவகையிலும் நியாயமானது அல்ல.

முஸ்லிம் அரசியல் தலைவர்களின் இந்த நியாயமற்ற செயற்பாடுகள் காரணமாகத்தான் 30 வருடங்களின் பின்பு இன்று தமிழர்கள் பிக்குகளிடம் தஞ்சமடைந்திருக்கிறார்கள். பிக்குகளின் பிரசன்னத்தைக் குறைகூறுபவர்கள் இந்த 30 வருடகாலத்தில் தமிழர்களின் இந்தக் கோரிக்கையினை சரியான முறையில் அணுகியிருந்தால் பிக்குகளிடம் தஞ்சமடையவேண்டிய தேவை தமிழர்களுக்கு இருந்திருக்காது என்ற உண்மையினை மறுக்கக் கூடாது.

எனவே நிர்வாக அலகொன்றின் உருவாக்கம் என்பது இனரீதியாகவோ மதரீதியாகவோ அல்ல என்பதும் அது அந்த மக்களின் தேவையைப் பொறுத்து நிர்வாகத்தினை மக்களின் காலடிக்குக் கொண்டு செல்தல் என்ற அரசின் குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டு அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் குறித்த அமைச்சினால் உருவாக்கப்படுவதாகும். அந்த நிர்வாகம் அரசின் சட்டதிட்டங்களுக்கேற்பவே நிர்வகிக்கப்படுவதுமாகும். கல்முனை வடக்குத் தமிழ் மக்கள் தங்கள் நாளாந்தக் கடமையினை இலங்கையிலுள்ள ஏனைய மக்களைப் போல இலகுவானமுறையில் பூர்த்திசெய்ய எதிர்பார்க்கிறார்கள். அவர்களுடைய எதிர்பார்ப்பினை மனிதாபிமான அடிப்படையில் அணுகி தீர்த்துவைக்க வேண்டுமே தவிர வரலாற்றைத் திரிபுபடுத்தியும் யதார்த்தத்தை மறுத்தும் இனவாதத்தை உருவாக்கி எல்லா இனங்களையும் இருண்ட உலகுக்குள் தள்ள முனைவதை எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

# அறிவோம் – தெளிவோம் – பகிர்வோம் – 40

## க.பொ.த. (உ/த) – புதிய பாடத்திட்டம் – தமிழ்

- மட்டுநகர் யுவன் -

### இலக்கணம்

1. பதம் என்றால் என்ன?
ஓர் எழுத்தாலேனும் ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துக்களாலேனும் ஆக்கப்பட்டுப் பொருள் தருமாயின் அது, பதம் எனப்படும்.

2. பதம் எத்தனை வகைப்படும்? அவை எவை?
இரண்டு வகைப்படும். அவையாவன: (1) பகாப்பதம் (2) பகுபதம்

3. பகாப்பதம் என்றால் என்ன?
பகுதி, விகுதி முதலிய உறுப்புக்களாகப் பகுக்க முடியாதவாறு இடுகுறியாய் ஆதிதொட்டு தானே ஒரு பதமாகி அமைவது பாகப்பதம் ஆகும்.

4. பகாப்பதம் எத்தனை வகைப்படும்? அவை எவை?
நான்கு வகைப்படும். அவையாவன:
(1) பெயர்ப் பகாப்பதம் (2) வினைப் பகாப்பதம் (3) இடைப் பகாப்பதம்
(4) உரிப் பகாப்பதம்

5. நான்கு வகைப் பகாப்பதங்களுக்கும் ஒவ்வோர் உதாரணம் தருக.
(1) பெயர்ப் பகாப்பதம் - நீர்
(2) வினைப் பகாப்பதம் - இரு
(3) இடைப் பகாப்பதம் - உம்
(4) உரிப் பகாப்பதம் - உரி

6. பகாப்பதம் ஆகக் குறைந்ததும் ஆகக்கூடியதுமாக எத்தனை எழுத்துக்களைக் கொண்டிருக்கும்?
இரண்டு தொடக்கம் ஏழு எழுத்துக்கனைக் கொண்டிருக்கும். (தற்கால வழக்கில் மாற்றமுண்டு)

7. பகுபதம் எத்தனை வகைப்படும்? அவை எவை?
இரண்டு வகைப்படும். அவையாவன:
(1) பெயர்ப் பகாப்பதம் (2) வினைப் பகாப்பதம்

8. இரண்டு வகைப் பகுபதங்களுக்கும் ஒவ்வோர் உதாரணம் தருக.
(1) பெயர்ப் பகாப்பதம் - கண்ணன் (கண் + அன்)
(2) வினைப் பகாப்பதம் - அழுதான் (அழு + த் + ஆன்)

9. பகுபதம் ஆகக் குறைந்ததும் ஆகக்கூடியதுமாக எத்தனை எழுத்துக்களைக் கொண்டிருக்கும்?
இரண்டு தொடக்கம் ஒன்பது எழுத்துக்கனைக் கொண்டிருக்கும். (தற்கால வழக்கில் மாற்றமுண்டு)

10. பகுபத உறுப்புக்கள் எத்தனை? அவை எவை?
ஆறு ஆகும். அவையாவன:
(1) பகுதி (2) விகுதி (3) இடைநிலை (4) சாரியை
(5) சந்தி (6) விகாரம்

11. பகுபதம் ஒன்றைத் தந்து, அதில் பகுபத உறுப்புக்களைக் குறிப்பிட்டுக் காட்டுக.
கடந்தனன் = கட + த்(ந்) + த் + அன் + அன்
பகுதி - கட, விகுதி - அன், இடைநிலை – த், சாரியை – அன்,
சந்தி – த், விகாரம் - 'த்' எனும் சந்தி 'ந்' ஆக மாறுவது.

12. நெடில்களுள் ஓரெழுத்து ஒருமொழிகளாக வருபவற்றை அட்டவணைப்படுத்திக்காட்டுக.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஆ | ஈ | ஊ | ஏ | ஐ | ஓ | 6 |
| மா | மீ | மூ | மே | மை | மோ | 6 |
| தா | தீ | தூ | தே | தை | -- | 5 |
| பா | -- | பூ | பே | பை | போ | 5 |
| நா | நீ | -- | நே | நை | நோ | 5 |
| கா | -- | கூ | -- | கை | கோ | 4 |
| வா | வீ | -- | வே | வை | -- | 4 |
| சா | சீ | -- | சே | -- | சோ | 4 |
| யா | -- | -- | -- | -- | -- | 1 |
| 9 | 6 | 5 | 7 | 7 | 6 | 40 |

13. குறில்களுள் ஓரெழுத்து ஒருமொழிகளாக வருபவற்றைக் கூறுக.
நொ – 1
து - 1
( 40 * 2 = 42)

# கற்போம்

## மென்டலின் பரிசோதனைகளின் விஞ்ஞான அடிப்படை மென்டலின் தலைமுறையுரிமை (Mendelian Heredity/Mendelism)

குணம் சவரிராஜா

தலைமுறையுரிமையில் தத்துவங்கள், முதன்முதலில், தற்பொழுது நவீன பிறப்புரிமையியலின் தந்தை எனக் கருதப்படும் ஆஸ்திரியா நாட்டின் அகுஸ்தீனியச் சபையைச் சேர்ந்த Gregor Mendel என்னும் பெயர்கொண்ட கிறிஸ்தவத் துறவியால் உருவாக்கப்பட்டன. கவனமாகத் திட்டமிடப்பட்ட பரிசோதனைகளில் தோட்டத்துப் பட்டாணித் தாவரத்தை வளர்த்ததன் மூலம் Mendel தலைமுறையுரிமையின் அடிப்படைத் தத்துவங்களைக் கண்டுபிடித்தார்.

நிறமூர்த்தங்கள் பற்றிய எண்ணக்கரு தோன்றுவதற்கு எத்தனையோ பத்தாண்டுகளுக்கு முன்னர் அவரின் பரிசோதனைகள் நடாத்தப்பட்டன. பிறப்புரிமையியல்புக்குரிய அலகுகளின் காவிகளாக நிறமூர்த்தங்கள் பிற்பாடு கண்டுபிடிக்கப்பட்டமை Mendel இன் இரண்டு அடிப்படை பிறப்புரிமைக்குரிய விதிகளுக்கு ஆதரவளித்தது. இவை இப்பொழுது மென்டலிசம் (mendelism) என அழைக்கப்படுகின்றன.

### பிறப்புரிமையியலில் பயன்படுத்தப்படும் சொற்கள்

மனித குடித்தொகையில் கபிலம், பச்சை, அல்லது நீலக் கண்கள் அல்லது கறுப்பு, கபிலம், அல்லது வெள்ளை தலைமயிர் என்றவாறு ஒரு குடித்தொகையின் தனியன்களுக்கிடையே தலைமுறையுரிமையடையக்கூடிய ஏராளமான மாறல்கள் காணப்படுகின்றன. தலைமயிரின் நிறம் அல்லது கண்ணின் நிறம் போன்று ஒரு குடித்தொகையின் தனியன்களுக்கிடையே காணப்படும் தலைமுறையுரிமையடையக்கூடிய ஒரு சிறப்பம்சம் பிறப்புரிமையியலில் ஒரு பண்பு (character) என அழைக்கப்படுகின்றது. மனிதரில் கபில அல்லது வெள்ளைத் தலைமயிர் அல்லது நீல, கபில அல்லது கறுப்பு கண் நிறம் போன்ற, அங்கியொன்றில் உள்ள ஒரு பண்பின் தலைமுறையிரிமையடையக்கூடிய மாறுபட்ட வடிவங்கள் இயல்புகள் (traits) என அழைக்கப்படும். இவ்வியல்புகள் பெற்றோர்களில் இருந்து எச்சங்களுக்குக் கடத்தப்படுகின்றன. அங்கியொன்றில் அவதானிக்கப்படக்கூடிய இயல்புகள் தோற்றவமைப்பு (phenotype) என அழைக்கப்படும்.

Mendel தனது பரிசோதனைப் பெறுபேறுகளை விளக்குகையில் "தலைமுறையுரிமையடையக்கூடிய காரணிகள்"; பற்றி விபரித்துள்ளார். நவீன பிறப்புரிமையியலில் தலைமுறையுரிமையடையக்கூடிய காரணிகள் பரம்பரையலகுகள் (genes) என அடையாளங்காணப்பட்டுள்ளன. பரம்பரையலகே (gene) பெற்றோரில் இருந்து எச்சத்துக்கு பிறப்புரிமையியல்புக்குரிய தகவலைக் கடத்தும் அடிப்படை அலகாகும். அது ஒரு குறிப்பிட்ட நிறமூர்த்தத்தின் மேல் பொதுவாக ஓர் தனித்துவமான தானத்தில் (locus) அமையப்பெற்றிருக்கும் ஒரு DNA தொடர் ஆகும். அது தனித்துவமான புரதங்களை அல்லது பல்பெப்பதைட்டுக்களைக் குறியீடு செய்வதன் மூலம் ஒன்று அல்லது பல இயல்புகளின் விருத்திக்குப் பங்களிப்பை வழங்குகின்றன. தானம் (locus) என்பது நிறமூர்த்தம் ஒன்றின்மேல் உள்ள நிலையான புள்ளியாகும்.

பரம்பரையலகுகளின் மாற்று வடிவங்கள் எதிருருக்கள் (alleles) என அழைக்கப்படுகின்றன. எதிருருக்கள் வெவ்வேறு நிறமூர்த்தங்களில் ஒரே தானத்தில் குடிகொள்ளும். எதிருருக்கள் தமது நியூக்கிளியோடைட்டுக்களின் தொடரில் வேறுபடுகின்றன. இந்த மாற்றமானது பரம்பரையலகினால் குறியீடு செய்யப்படும் புரதத்தின் தொழிற்பாட்டைப் பாதிக்கக்கூடியதால் அங்கியின் தோற்றப்பாட்டையும் பாதிக்கக்கூடியதாக உள்ளது. இருமடியமான ஒவ்வொரு அங்கியும் இரண்டு பெற்றோர்களினால் பெற்றுக்கொள்ளப்பட்ட நிறமூர்த்தங்களின் மேல் அமைந்து காணப்படும் ஒவ்வொரு பரம்பரையலகினதும் குறைந்தது இரண்டு பிரதிகளைக் கொண்டிருக்கும். இப்பிரதிகள் இரண்டும் ஒத்தவையாக இருக்கலாம் அல்லது ஒன்றிலிருந்து ஒன்று வேறுபடலாம். தரப்பட்ட பரம்பரையலகு ஒன்றுக்கு இரண்டு எதிருருக்களும் ஒத்த தன்மையாகக் காணப்படும் நிலை சமநுகத்துக்குரிய நிலை (hormozygous state) என அழைக்கப்படும். மாறாக தரப்பட்ட பரம்பரையலகிற்கு வெவ்வேறு தன்மையான எதிருருக்களைக் கொண்டிருக்கும் நிலை இதரநுகத்துக்குரிய நிலை (heterozygous state) என அழைக்கப்படும்.

தோற்றவமைப்பானது (phenotype) தனியனின் பிறப்புரிமையமைப்பிற்கும் (genotype) அதன் சூழலுக்கும் இடையே நடைபெறும் இடைத்தாக்கத்தின் விளைவாக ஏற்படுகின்றது. அங்கி ஒன்றின் பிறப்புரிமையியற் கட்டமைப்பு அல்லது எதிருருக்களின் கூட்டம் பிறப்புரிமையமைப்பு என அழைக்கப்படும். தரப்பட்ட பரம்பரையலகு ஒன்றின் சார்பாக தனியன் ஒன்றின் பிறப்புரிமையமைப்பு, ஒன்றில் சமநுகமுடையதாக அல்லது இதரநுகமுடையதாக இருக்கலாம்.

தொடர்ச்சி... (பக்கம் -11)

பக்க அனுசரணை
NCL
NELSON COLLEGE LONDON
IN PARTNERSHIP WITH
LONDON METROPOLITAN UNIVERSITY

# அக்கினி புலையவெளி உணவு உற்பத்திப் பொருட்கள்

AGNI PULAYAVELY INDUSTRIES

- சுவையான மரவள்ளிப் பொரியல்
- சுவையான மிக்சர்

ஆகியன தற்போது எம்மால் விற்பனை செய்யப்படுகின்றன. தேவையானவர்கள் எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இல:- 0771516203

விலாசம் : அக்னி உற்பத்திகள், பதுளை வீதி, புலையவெளி, செங்கலடி. மட்டக்களப்பு



## மரவள்ளிக் கிழங்குச் சீவல்

100 கிராம் 60 ரூபாய்

200 கிராம் 120ரூபாய்



## மிக்சர்

1 கிலோ 300ரூபாய்

எம்மிடம் இருந்து இந்த உற்பத்திப் பொருட்களைப் பெற்று விற்பனை செய்ய விரும்புவோர் விலையைப் பேசித் தீர்மானிக்கலாம்.

கொள்வனவு செய்யப்படும் அளவினை பொறுத்து மட்டக்களப்பிற்கு உட்பட்ட பகுதிகளில் கொண்டுவந்து விநியோகிக்கப்படும்.

(இது லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலயத்தின் ஆதரவு மற்றும் நிதியுதவியில் மேற்கொள்ளப்படும் கிராம அபிவிருத்தித் திட்டம்.)

Printed at Express News Papers (Cey) Ltd and Published by Arangam News (Pvt)Ltd No 227 Bar Road Batticaloa